ISSN 1391-9504

பொதுசன நூலகம்

# Vijey விஜய்

# விஜய்

15.09.2010 - மலர் 07, இதழ் 28



## 'பணம்' அறிமுகமான வரலாறு

## ஜப்பானின் கல்வி முறை



## உலகின் மிகக் குள்ளமான மனிதர்



## உலகின் இயற்கை அதிசயங்கள்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முத்துக்குளித்தல் உரிமை

நாட்டின் முத்துக்குளித்தல் துறையின் முழு உரிமையும் மன்னனிடமே இருந்தது. அதனை உறுதிப்படுத்துவதற்காக மன்னனின் சேவையாளர்கள் முத்துக்குளித்தலில் ஈடுபடுவோருக்கு அனுமதி வழங்கினர். திருகோணமலையில் இருந்து மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணத்திற்கு கடிதங்கள் கொண்டு செல்வதை தடை செய்தார்கள். அது மன்னனுக்குரிய பிரதேசங்களின் ஊடாக செல்வதையே தடை செய்தனர். அப்பிரதேசங்களில் நெல் விற்பனையும் தடை செய்யப்பட்டது. கறுவாப்பட்டை உரிப்போருக்கும் வர்த்தக சங்கத்தினருக்கும் இடையே கலவரம் ஏற்பட்டது. அதில் அரச சேவையாளர்கள் தலையிட விரும்பவில்லை. இவை அனைத்தையும் துறைமுகங்கள் திறப்பதற்காகவே மன்னன் மேற்கொண்டான். எனினும், அவை எதுவும் நடைபெறவில்லை. இதனால், மன்னனின் சேவையாளர்களும் மன்னனும் கடுங்கோபமுற்றனர்.

மன்னன் மீண்டும் பாதைத் தடைகளை போடுவதற்கு கடுமையான சட்டங்களை விதித்தார். ஒல்லாந்த வர்த்தக சங்கத்தினருடன் மக்கள் வர்த்தகம் செய்யக்கூடாது என பகிரங்கமாகவே தடை விதித்தார்.

மாபோலை, பஸ்பிட்டால், நாகலகம ஆகிய இடங்களில் பாதைகள் மூடப்பட்டன. அதனை சரியாக அமுல்படுத்த 'பாதைத் தடைகள்' அமைக்கப்பட்டன. இதற்கிடையில் துறைமுகங்கள் மூடப்பட்டதால் ஏற்பட்ட நட்டங்கள் குறித்து முறையிட பிரதிநிதிகள் குழுவொன்றையும் அனுப்பினர். அதற்கு பதில் அளிக்கும்முகமாக பாதைத் தடைகளை நீக்கி பாதைகளை திறக்குமாறு ஒல்லாந்தர் கேட்டுக்கொண்டனர். மன்னனின் வர்த்தகத்திற்காக புத்தளம் துறைமுகம் திறக்கும்வரை பாதைத் தடைகளை நீக்காமல் தொடர்ந்து பாதைகளை மூடி வைக்குமாறு மகா அதிகாரம் கேட்டுக்கொண்டார். அப்படிக் கேட்பதற்கு அவருக்கு எத்தகைய அதிகாரமும் இல்லையென ஆள்பதி மீண்டும் கூறினார். எனினும், மன்னனின் பாக்கை அதிக விலை கொடுத்து வாங்கத் தாம் தயார் எனவும் தெரிவித்தார். அதற்கு செவிசாய்த்தாலும் பாதைத் தடைகள் நீக்கப்படவில்லை. அக்காலகட்டத்தில் வர்த்தக சங்கத்திற்கு எதிராக சிறிய கலவரம் ஒன்று ஏற்பட்டது. அவை மன்னனின் பிரதானிகளின் உதவியுடன்தான் நடந்தன என ஒல்லாந்தர் உறுதியாக நம்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய பல்கலைக்கழகங்களில் Charted, CIMA பாடநெறிகள்



தேசிய பல்கலைக்கழகங்களில் கணக்கியல் துறைசார்ந்த பாடநெறிகளான Charted மற்றும் CIMA பாடநெறிகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பீ. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அதன்படி, பல்கலைக்கழக மாணவர்கள் தமது பட்டப்படிப்புக்கு மேலதிகமாக பணம் செலுத்தி இந்தப் பாடநெறிகளைக் கற்கக்கூடியதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. பல்கலைக்கழக மாணவர்கள் இவ்வாறான பாடநெறிகளைத் தொடர்வதற்காக அரசாங்கத்தினால் கடன் வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத்திட்டமொன்றை செயற்படுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# 2011 இல் 79 பாடநூல்கள் இரண்டு பகுதிகளாக வெளியிடப்படும்

அதிகூடிய எண்ணிக்கையிலான தாள்களையுடைய 79 பாடநூல்கள் 2011 ஆம் ஆண்டிலிருந்து இரண்டு பகுதிகளாக அச்சிடப்படவுள்ளதாகவும் இவற்றை பாடசாலை மாணவர்களால் இலகுவாகப் பயன்பாட்டுக்கு உட்படுத்தக்கூடியதாக இருக்கும் எனவும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக கல்வி அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு என்பன இணைந்து மேற்கொண்ட ஆய்வொன்றின் பெறுபேறாக, அதிக எடை கொண்ட பாடசாலைப் புத்தகப்பையானது மாணவர்களின் தேகாரோக்கியத்திற்குக் கேடு விளைவிப்பதாகத் தெரியவந்துள்ளது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாகவே 2011 இல் சுகாதார தரத்திலான புத்தகப்பையொன்றை அறிமுகப்படுத்தவும் எடைகூடிய பாடநூல்களை இரண்டு பகுதிகளாக அச்சிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

அச்சிடப்படுகின்ற பாடநூல்களின் முதல் பகுதி முதல் ஆறு மாதங்களுக்கிடையிலும் இரண்டாவது பகுதி ஏனைய ஆறு மாதங்களுக்கிடையிலும் மாணவர்களிடையே விநியோகிக்கப்படவுள்ளது.



இவற்றை மாணவர்கள் இலகுவாகப் பாவனைக்குட்படுத்தக்கூடியதாக இருக்கும் என்பதோடு, பாடசாலைக்கு எடுத்துச் செல்லவும் இலகுவாக அமையும்.

மேலும், இவ்வாறு இரு பகுதிகளாக வழங்கப்படும்போது குறித்த பாடநூல்களை மீள் பயன்பாட்டுக்கு உட்படுத்தும் தவணைகளை அதிகரிக்கக்கூடியதாக இருக்கும். மீள் பயன்பாட்டின் காரணமாக, பாடநூல் அச்சிடுவதற்கு செலவாகும் தொகையில் கூடியளவு தொகையை மீதப்படுத்திக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த வருடத்தில் மட்டும் பாடநூல் மீள் பாவனையினால் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்துக்கு 1010.6 மில்லியன் ரூபாவை சேமிக்கக்கூடியதாக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பல்கலைக்கழக பகிடிவதைகளை உடன் அறியத்தரவும்!

### பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவிப்பு




ஏதேனுமொரு பல்கலைக்கழகத்தில் பகிடிவதையுடன் தொடர்பான சம்பவங்கள் நடைபெறுமாயின், அது குறித்து உடன் அறியத்தருமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பல்கலைக்கழக மாணவர்களையும் பொதுமக்களையும் கேட்டுக்கொண்டுள்ளது.

இத்தகைய சம்பவமொன்று நேரின், அது குறித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அல்லது அந்தந்த பல்கலைக்கழக நிர்வாக அதிகார சபைக்கு தெரியப்படுத்தலாம் என்றும், அவ்வாறு கிடைக்கும் முறைப்பாடுகளை அந்தந்த பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு சமர்ப்பித்து, அத்தகைய செயல்களில் ஈடுபடும் மாணவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறித்த ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

## பிள்ளைகள் அநாகரிக வெப்தளங்களை பார்வையிடுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை



பிள்ளைகள் இணைய வலைப்பின்னலூடாக அநாகரிக வெப்தளங்களைப் பார்வையிடுவதைத் தடுப்பதற்கான வேலைத்திட்டமொன்றை செயற்படுத்துவது குறித்து தொலைத்தொடர்பு சீராக்கல் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, வீடுகளில் பாவனையிலுள்ள கணினிகளினூடாக அநாகரிக திரைப்படங்கள் அல்லது காட்சிகளைப் பார்வையிட முடியாதவாறான தொழில்நுட்ப முறையொன்றை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அறியக்கிடைக்கின்றது. எனினும், இந்த தொழில்நுட்பத் திட்டத்தை அமைப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் பாரிய தொழில்நுட்ப வேலைத்திட்டமொன்றை மேற்கொள்ளவேண்டி இருப்பதாக இந்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், வீடுகளில் உள்ள கணினிகளில் பாதுகாப்பு மென்பொருளொன்றைப் பயன்படுத்துவதற்கு பெற்றோர்கள் தனியாக செயற்படுவார்களாயின், நடைமுறையில் அது சாத்தியமாகக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். வீட்டுப் பாவனையிலுள்ள கணினிகளுக்கு இவ்வாறானதொரு பாதுகாப்பு மென்பொருளை உட்சேர்ப்பதனால் இணையத்தினூடாக பெற்றுக்கொள்ளக்கூடிய அநாகரிக காட்சிகள் மட்டுப்படுத்தப்படுகின்றது.

## 'சேகரிப்போம் சுவீகரிப்போம்' பரிசுப் போட்டி

* பாடசாலை பேக்ஸ்,
* டீ-ஷேர்ட்ஸ்,
* டீ-மக்ஸ்,
* கெப்ஸ்களை

**வெல்லுங்கள்!**



*இலங்கை வரைபடமானது பன்னிரெண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு வாரத்திலும் பிரசுரிக்கப்படும். அவ்வாறு வாராவாரம் பிரசுரிக்கப்படுகின்ற பகுதிகளை தொடர்ச்சியாக சேகரித்து வாருங்கள். பன்னிரெண்டு பகுதிகளையும் சேகரித்த பின்னர், இலங்கையின் வரைபடம் முழுமைப்படும் வகையில் அவற்றை ஒழுங்கமைத்து-தபால் அட்டையில் ஒட்டி-எமக்குத் தபாலிட்டு பரிசுகளை சுவீகரித்துக்கொள்ளுங்கள். முழுமைப்படுத்தப்பட்ட வரைபடத்தை தபாலிட வேண்டிய திகதி பின்னர் அறிவிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு 011-2479653 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.*

### வெற்றி பெறுவோருக்கான பரிசுகள்

10 பேருக்கு - பாடசாலை பேக்ஸ் (School bags)
15 பேருக்கு - டீ-ஷேர்ட்ஸ் (T-Shirts)
100 பேருக்கு - கெப்ஸ் (Caps)
100 பேருக்கு - டீ-மக்ஸ் (Tea mugs)

### விதிமுறைகள்

* ஒருவர் எத்தனை தபாலட்டைகளையும் அனுப்பலாம்.
* முழுமைப்படுத்திய வரைபடத்தை தபாலட்டையில் மாத்திரமே அனுப்புதல் வேண்டும்.
* தபாலுறையில் அனுப்புபவை நிராகரிக்கப்படும்.
* நிழற்பிரதிகள் (Photo copy) ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இந்த வார பாகம்
இல: 10




### தவறவிட்டவர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு...

இலங்கை வரைபடத்தின் பாகம் 1-5 வரையான பகுதிகளைத் தவறவிட்டவர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு.... பொறுத்திருங்கள். விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சின்னமுத்துவும் கொப்புளிப்பானும்

**சின்னமுத்துவும் கொப்புளிப்பானும் பிரித்தறிந்துகொள்ள முடியாத சிற்சில வேறுபாடுகள் கொண்ட ஒரே இன நோய்களாகும். இந்நோய்கள் பொதுவாக மற்றவர்களைத் தொற்றும் தன்மை கொண்டவை. இந்நோய் கண்டவர்கள் நன்கு சுகாதாரம் பேணுவதும், நோயேற்பட்டது முதல் அவ்வப்போது கிருமிநீக்கம் செய்யப்பட்ட பொருட்களை உபயோகிப்பதும் நோய் அதிகரித்த நிலைக்குப் போவதைத் தடுத்துக்கொள்வதும் விரைவில் குணமாவதற்கும் ஏனையோரை நோய் தொற்றாமலிருக்கச் செய்வதற்கும் வேண்டிய சிறந்த வழிமுறைகளாகும்**



சின்னமுத்து (Small Pox) நோயானது, 'சின்ன வைசூரி' என்ற பெயரிலும் அழைக்கப்படுகின்றது. சின்னமுத்து ஒருவருக்குத் தோன்றுமுன்னர் அவரிடத்தில் சில அறிகுறிகள் தோன்றும். இக்காலம் முன்தோன்று காலம் (Prodromal Period) எனவும், குணங்கள் முன்தோன்று குணங்கள் (Prodromal Symptoms) எனவும், குறிகள் முன்தோன்று குறிகள் (Prodromal Signs).எனவும் அழைக்கப்படுகின்றன. முன்தோன்று காலத்தில் உட்சொக்குச் சீதச்சவ்வில் ஏற்படும் சிறப்புக்குறி கோப்ளிக் புள்ளி (Coplik Spots) எனப்படும். முன்தோன்று






குணங்களாக காய்ச்சல், இணைவழற்சி (Conjuntivitis) பீனிசம் (Coryza) கிளைமூச்சுச் சுழலழற்சி (Bronchitis) என்பன ஏற்படலாம்.

ஒருவரின் உடம்பில் சின்னமுத்து வைரஸ் உட்சென்று பத்து நாட்களில் அவருக்குக் காய்ச்சல் ஏற்படும். காய்ச்சல் தோன்றி மூன்று நான்கு நாட்கள் சென்றதும் மங்கல் சிவப்புநிறப் பருக்கள் முகத்தில் பரவலாகத் தோன்றும். இவை 4 முதல் 6 நாட்கள் வரை நிலைபெற்று, பின்னர் மண்ணிறமாகி செதில் உரிவு ஏற்படும். பருவகாலத்தில் காய்ச்சல் அதிகமாகக் காணப்படும்.

இந்நோய்க்குத் துணையாக ஏற்படும் நோய்களை சிக்கல்கள் (Complications) எனக் கூறுவர். கிளை மூச்சுக் குழாயலற்சி (Bronchitis), நடுச்செவி அழற்சி (Otitis media) என்பன இந்நோயோடுகூடிய சிக்கல் நோய்களாகும். நுண்ணுயிர் எதிர்ப்பிகள் (Antibiotics) கண்டுபிடிப்பதற்கு முன்னர் இந்நோய்கள் பெரிதாகக் கருதப்பட்டன.

மூளையழற்சி (Encephalitis.), பாரியக்கல நுரையீரலழற்சி (Giant cell pneumonia) ஆகியன சில சமயங்களில் சிக்கல் நிறைந்த நோய்களாக வருவதுமுண்டு. சின்னமுத்துவால் ஏற்படும் மூளையழற்சி மிகவும் ஆபத்தானதாகக் கருதப்படுகின்றது.

சின்னமுத்து ஏற்பட்டு குணமடைந்தவர்களுக்கு நரம்பு சம்பந்தமான நோய்க்குணங்கள் ஏற்படலாம். சோர்வு, வாந்தி, குக்கல், தலையிடி என்பன அவற்றில் சிலவாகும். பாரியக்கல நுரையீரலழற்சி (Giant cell pneumonia) எளிதில் ஏற்படுவதில்லை. சின்னமுத்து வைரஸ் நுரையீரலை நேரடியாகத் தாக்குவது அபாயரமானதாகக் கருதப்படுகின்றது. சில நாடுகளில் சின்னமுத்துத் தடையின் பொருட்டு வலுத்தணிவாக்கப்பட்ட சின்னமுத்து வைரஸ் (Attenuated Measles Virus) ஊசிமூலம் ஏற்றப்படுகின்றது.

சின்னமுத்து வைரஸ் நோயாளியின் மூக்குச் சுரப்பிகளிலும் சிறுநீரிலும் காணப்படுவதால், நோயாளியின் நேர்த் தொடர்பாலும், பாவனைப் பொருட்களின் தொடர்பாலும் வீழ்த்துளிகளாலும் பரவும் வாய்ப்பும் மற்றவர்களைத் தொற்றும் வாய்ப்பும் அதிகமாகக் காணப்படுகின்றது. முன்தோன்று காலத்திலிருந்து பருக்கள் தோன்றி, நான்கு நாட்கள் கழியும்வரை இந்நோய் மற்றையோரைத் தொற்றும் வாய்ப்பிருப்பதாகக் கருதப்படுகின்றது.



ஒருமுறை சின்னமுத்து நோய் கண்டவர்கள் நிரந்தரப் பாதிப்பின்மைப் பெறுவர். நோய்ப்பருத்தோன்றி, ஒருவார காலம் வரை நோயாளி தனியாக்கப்படின், பிறருக்கு நோய் தொற்றாமலும் துணைத்தொற்றல் ஏற்படாமலும் பாதுகாத்துக் கொள்ளலாம். நோயாளியின் பாவனைப் பொருட்கள் தரிப்பிடங்கள் அவ்வப்போது கிருமி நீக்கம் செய்யப்படுவது நோய்ப்பரவலைத் தடுப்பதற்கான சிறந்த வழிமுறையாகும்.



கொப்புளிப்பான் (Chicken Pox) என்பது உடம்பில் கொப்புளங்களை அல்லது புடகங்களை (Vesicles or Blisters) ஏற்படுத்தும் ஒருவகை நோயாகும். இது விளையாட்டம்மை, பெரிய வசூரி, நீர்க்கொள்ளுவான் அம்மை என்றெல்லாம் தமிழில் அழைக்கப்படுகின்றது.

இந்த வைரஸ் ஒருவரை அணுகி இருவாரத்திலிருந்து மூன்று வாரங்கள் சென்றபின், நோய்க்குணம் வெளிப்படும். புடகந்தோன்ற 5 நாட்களுக்கு முன்பிருந்து, புடகந்தோன்றி 8 நாட்கள் வரை 'நோய்ப்பரிமாற்றம்' பெறும் காலமாகும். கொப்புளங்கள் தோலிலிருந்து குமிழ்கள் (Bubbles) போன்று தோன்றும். தோலில் கொப்புளங்கள் வெளிப்படுமுன் இரண்டு அல்லது மூன்று நாட்கள் வரை காய்ச்சல் ஏற்படும். தோலில் பொட்டுப்போன்ற பருக்கள் தோன்றி, சில மணித்தியாலங்களில் புடகங்களாகும். இப்புடகங்கள் மூன்று அல்லது நான்கு நாட்கள் வரை நீடித்த பின்னர் காய்ந்து, செதில்களாக மாறிவிடும். உடலில் மூடப்பட்ட பகுதிகளிலேயே முதலில் புடகங்கள் தோன்றும். மூலை அழற்சியே (Primary pneumonia) நோயின் ஆபத்தான கட்டமாகக் கருதப்படுகின்றது.

கொப்புளிப்பானும் அம்மைநோய் போன்றே தோன்றும். புடகத்தின் அடியிலிருந்து எடுக்கப்பட்ட செதுக்கத்தை நுணுக்குக்காட்டியால் நோக்கினால், பாரிய கலங்கள் (Giant Cells) காணப்படும். இதுவே இந்நோயை அம்மை நோயிலிருந்து வேறுபடுத்தி இனங்கண்டுகொள்வதற்கான சிறப்புக் குறியாகும். பாரிய கலங்கள் அம்மைநோயில் காணப்படமாட்டாது. தவிர, கொப்புளிப்பான் நோய்ச் செதில்களில் வைரஸ் காணப்படாமையால், நோய்ப்பரிமாற்றலுக்கு செதில்கள் காரணமாக அமையாது. அம்மைநோய்ச் செதில்களில் நோய்ப்பரிமாற்று வைரஸ் காணப்படுகின்றது.

அம்மை நோய் போன்றே, கொப்புளிப்பானும் நோயாளியின் நேரடித் தொடர்பாலும் பாவனைப் பொருட்களிலிருந்தும் வீழ்த்துளிகளினாலும் நோய்ப்பரவலை ஏற்படுத்துவதனால், நோயாளி பத்து நாட்கள் வரை மற்றையோரிடமிருந்து விலகியிருப்பதும் அழுக்கான பாவனைப் பொருட்கள் கிருமி நீக்கம் செய்யப்படுவதும் கட்டாயமானதாகும். ஆதிகாலம் முதல் இந்நோய்க்கான கிருமி நீக்கிகளாக வேப்பிலை, மஞ்சள் என்பன பாவிக்கப்பட்டு வந்துள்ளன.

**-செம்மைத்துளியான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி முகாமைத்துவம் - 20

## கற்றலுக்கான ஆலோசனைகள்

# அறிவுக்குக் களம் அமைக்கும் நுண்ணறிவு




'IQ'என்ற சுருக்கக் குறியீட்டால் அழைக்கப்படும் 'நுண்ணறிவு'(Intelligence Quotient) மனிதனது உள ஆற்றலை (Mental Ability) அளக்கும் கருவி போன்றதாகும். ஒரு மனிதனது உள ஆற்றலைக் கணிப்பிட்டே அவனது அறிவை அளவீடு செய்துகொள்ள முடியும். அத்துடன், இந்த நுண்ணறிவை 'நோக்குடன் செயற்படுவதற்கும் பகுத்தறிவு பூர்வமாகச் சிந்திப்பதற்கும் சூழலை வினைத்திறனுடன் கையாளவும் தனி நபரிடம் உள்ள அறிவுத்திறன்' என வரைவிலக்கணப்படுத்தலாம். ஒரு மனிதனின் வெற்றியும் தோல்வியும் அவனின் நுண்ணறிவிலேயே தங்கியுள்ளது.

### நுண்ணறிவு அளவிடு

நுண்ணறிவு அளவீட்டை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் அல்பிரட் பீனே என்பவராவார். 1905 இல் பெரிஸில் இவரால் முன்வைக்கப்பட்ட நுண்ஈவுச் சூத்திரத்துக்கு 1916 இல் ஸ்ரான்போட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த எல்.எம்.டேர்மன் என்பவர் தற்போது உபயோகித்துள்ள பின்வரும் நுண்ஈவுச் சூத்திரத்தை வகுத்தார். அதுவே, 'ஸ்ரான் போட் பீனே அளவுச் சட்டம்' எனப்படுகின்றது.

**சூத்திரம் வருமாறு;**

$$\text{நுண்ணறிவு (IQ)} = \frac{\text{உள வயது (Mental Age)}}{\text{கால வயது (மெய் வயது) (Chronological Age)}} \times 100$$



உதாரணமாக; இரண்டு மாணவர்களை எடுத்துக்கொள்வோம். A என்ற 6 வயது மாணவன் ஒருவன், 8 வயது மாணவன் ஒருவனுக்குரிய நுண்ணறிவுப் பரீட்சையில் சித்தியடைந்தால், அவனது உள வயது 8 ஆகும். B என்ற மாணவன் 12 வயதுடையவன். 12 வயதுக்குரிய நுண்ணறிவுப் பரீட்சையில் தோல்வியடைந்து, 8 வயதுக்குரிய பரீட்சையில் சித்தியடைந்தால், அவனது உள வயது 8 ஆகும். மெய் வயது 12 ஆகும்.

இங்கு, A எனும் மாணவனின் IQ என்ன?
B எனும் மாணவனின் IQ என்ன?

$$\text{* A இன் IQ} = \frac{\text{8 (உள வயது)}}{\text{6 (மெய் வயது)}} \times 100 = \frac{400}{3} = 133.3$$

$$\text{* B இன் IQ} = \frac{\text{8 (உள வயது)}}{\text{12 (மெய் வயது)}} \times 100 = \frac{400}{6} = 66.6$$




A என்ற மாணவனின் அறிவுத்திற அளவெண் 133.3 ஆகும். B என்ற மாணவனின் அறிவுத்திற அளவெண் 66.6 ஆகும். எனவே, 12 வயது மாணவனிலும் பார்க்க 6 வயது மாணவன் உளவாற்றல் மிக்கவனாக விளங்குகின்றான் என்ற முடிவுக்கு வரலாம்.

### நுண்ணறிவுச் சோதனை

இன்றைய நிலையில் மாணவரின் கல்வித்திறமை பற்றி எதிர்வுகூற நுண்மதிச் சோதனை சிறந்தது எனக் கருதப்படுகின்றது. இதன் அடிப்படையில் அநேக நுண்ணறிவுச் சோதனைகள் நடைமுறைக்கு வந்துள்ளன. அவையாவன;

1. தனியாள் சோதனை (Individual Test)
2. கூட்டச் சோதனை அல்லது குழுச் சோதனை (Group Test). இது இருவகைப்படும்.
   (i) சொல்சார் கூட்டச் சோதனை
   (ii) சொல் சாராக் கூட்டச் சோதனை

பாடசாலையில் ஒவ்வொரு வகுப்பிலும் பல்வேறு திறமைகளுக்கு ஏற்றவாறு மாணவர்களை வகைப்படுத்திக் கற்பிப்பது சுலபமாகையால், நுண்மதிச் சோதனை உதவுகின்றது. புலமைப்பரிசில் பரீட்சையிலும் இது உள்ளடக்கப்பட்டுள்ளது. உயர் கல்விக்கு மாணவரைத் தெரிவு செய்யவும் நுண்ணறிவுச் சோதனை பயன்படுகிறது. ஏனைய தொழிற்துறைகளிலும் இம்முறை பின்பற்றப்படுகின்றது. நுண்ணறிவானது மிகவும் முக்கியமான ஒரு கற்கைநெறியாகும். இந்தப் பாடத்தை குறுகிய நேரத்தில் கற்க முடியாது. அது தொடர்ச்சியான பயிற்சியின் மூலமே கற்கப்பட வேண்டும். இவ்வாறான அறிவுத்துறை சார்ந்த நுண்ணறிவுப் பாடத்தைக் கற்பதால் வாழ்க்கைப் பிரச்சினைக்கு நுணுக்கமாக தீர்வு காணவும் செயலாற்றவும் முடியும். **(தொடரும்)**




**-எம்.ஏ.எஃப். சப்ரானா**

# கிரகங்களின் மோதல்

விண்ணில் அருகருகே சுற்றிக்கொண்டிருக்கின்ற RS Canum Venaticorums என்ற இரண்டு நட்சத்திரங்களை சுற்றி வருகின்ற இரண்டு கிரகங்கள் விரைவில் மோதும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கிரகங்கள் ஒன்றுடனொன்று இவ்வாறு மோதிக்கொள்வதால், விண்வெளியில் தூசு மண்டலம் ஏற்படுவது சகஜம்தான். அத்துடன், இவ்வாறான கிரகங்களில் உயிரினங்கள் வாழத் தேவையான வளி, நீர் போன்றவை இருப்பதற்கான வாய்ப்புகள் இருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஆனால், இவை அடிக்கடி ஒன்றுக்கொன்று மோதிக்கொள்ளும் வாய்ப்பு அதிகமாக இருப்பதால், இங்கு மனிதனால் அதிக நாட்களுக்கு வாழ முடியாது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.







# சுழலும் 'நியுட்ரோன்' நட்சத்திரம் கண்டுபிடிப்பு

விஞ்ஞானிகள் மூவருடன் அமெரிக்க தம்பதியொன்றும் ஜேர்மனியர் ஒருவரும் இணைந்து நவீன ரேடியோ நியுட்ரோன் நட்சத்திரம் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர். Einstein @ home எனும் நிறுவனம் மூலமே இந்தக் கண்டுபிடிப்பு சாத்தியப்பட்டுள்ளது.

இந்த நவீன 'நியுட்ரோன்' தாரகை PSR J2007+2722 என அழைக்கப்படுவதோடு, அது நிமிடத்திற்கு 41 முறை சுழலுகின்றது. புவியிலிருந்து 17,000 ஒளி வருடங்கள் தூரத்தில் இது அமைந்துள்ளது. ஏனைய நியுட்ரோன் நட்சத்திரங்களில் இருந்து இந்த நட்சத்திரம் வேறுபட்ட தன்மை கொண்டதென விஞ்ஞானிகள் கருதுகின்றனர். அது தனது சுற்றுப் பாதையில் வேகமாக சுழன்று வருகின்றது. அத்துடன், விண்வெளியில் தனது நிலையிலேயே தொடர்ந்து நிலை கொண்டுள்ள இத்தாரகையானது, புதிதாகத் தோன்றிய இளம் 'நியுட்ரோன்' நட்சத்திரமாக இருக்க வாய்ப்பில்லை என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

Einstein @ home நிறுவனமானது ஈர்ப்புச் சக்தி மற்றும் பிரபஞ்ச விஞ்ஞானம் குறித்த Wisconsin Milwaukee பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ளது. Wisconsin Milwaukee பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் Max Plank இதனை வெற்றிகரமானதொரு கண்டுபிடிப்பு என பிரகடனப்படுத்தியுள்ளதோடு, மக்களின் பங்களிப்புடன் விண்வெளியில் புத்தம் புதிய தகவல்களைக் கண்டுபிடிக்க முடியும் என்பதை இக்கண்டுபிடிப்பு நிரூபித்துள்ளது எனத் தெரிவித்துள்ளார்.



# நிலாவில் வெடிப்புகள்




*அண்மைக்காலமாக சந்திரனில் அதிக வெடிப்புகள் தோன்றியிருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த வெடிப்புகள் நிலா சுருங்குவதனாலேயே ஏற்பட்டுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். அளவுக்கதிகமான குளிரின் காரணமாகவே, இந்நிலை ஏற்பட்டுள்ளதாக ஆராய்ச்சியின்போது தெரியவந்துள்ளது. செயற்கைக்கோள்களினூடாகப் பெறப்பட்ட படங்களை வைத்துப் பார்க்கும்போது, 100 மீற்றர் அளவுக்கு நிலா சுருங்கியிருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.*

*இது போன்ற வெடிப்புகள் முதன்முறையாக 1970 ஆம் ஆண்டு அப்பலோ விண்கலம் அனுப்பிய படங்களின் மூலம் கண்டறியப்பட்டது. ஆனால், அன்று இருந்ததைவிட, 14 இற்கும் அதிகமான வெடிப்புகள் இன்றளவில் தோன்றியிருப்பதாக, ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த வெடிப்புகள் நிலாவில் உள்ள பாறைகள் அதிக குளிரினால் சுருங்கி, ஒன்றுடன் ஒன்று மோதுவதனாலேயே ஏற்படுகின்றது என மேலும் தெரிவிக்கப்படுகின்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் இயற்கை

**அதிசயங்கள் பல நிறைந்ததுதான் இந்த உலகம். இந்த அதிசயங்களில் சில இயற்கையாகவே அமைந்தவை. வேறு சில மனித செயற்பாட்டால் உருவானவை. அந்தவகையில் இயற்கை அதிசயங்கள் சிலவற்றைப் பார்ப்போம்**



இயற்கை அதிசயங்கள் பல உலக மக்களை மிகவும் கவர்ந்தவையாகவே உள்ளன. இந்த இயற்கை அதிசயங்களை தரையில் காணக் கூடிய அதிசயங்கள் எனவும் நீரின் அடியில் காணக்கூடிய அதிசயங்கள் என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். உல்லாசப் பயணிகள், நாடுகாண் பயணிகள், சுற்றுலா நிறுவனங்கள், பல்வேறு நாடுகளின் சுற்றுலா சபைகள் மற்றும் அமெரிக்காவின் சி.என்.என் ஊடக வலையமைப்பு ஊடாகவும் அரச மற்றும் தனியார் மட்டத் தில் இந்த இயற்கை அதிச யங்கள் தெரிவு செய் யப்பட்டுள்ளன.

## தரைமட்டத்தில் காணக்கூடிய இயற்கை அதிசயங்கள்

01. இகுவாசு நீர்வீழ்ச்சி
02. சொரென்கெட்டி விலங்குத் தொகுதிகள்
03. அன்கொரொன்கோரோ வன பாதுகாப்புப் பகுதி
04. கெலபகொஸ் தீவுகள்
05. மகா கனியம் (கிரேன் கெனியன்)
06. அமேசன் மழைக்காடுகள்
07. கிரேட் பெரியர் ரீப்
08. விக்டோரியா நீர்வீழ்ச்சி
09. போராபோரா
10. கெப்போடோசியா
11. ரியோ டி ஜெனைரோ துறைமுகம்
12. எவரெஸ்ட் சிகரம்
13. துருவ உலகம்
14. பெரோக்குட்டின் எரிமலை

**உலகில் நீருக்கடியில் உள்ள அதிசயங்கள்:**

15. பலவ்
16. பேலிஷ் தடைப்பாறை
17. ஆழ்கடல் குகைகள்
18. பைக்கால் வாவி
19. வட செங்கடல்

## 'இகுவாசு' நீர்வீழ்ச்சி (Iguazu Falls)

அடர்ந்த மரங்கள் சூழ்ந்த உயரமான இடங்களில் இருந்து பால் போல் கொட்டும் அருவிகளைப் பார்த்தால் எமக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும்? அத்தகைய ஓரிடம் தான் இகுவாசு நீர்வீழ்ச்சி. இங்கு ஒன்றல்ல இரண்டல்ல 275 நீர்வீழ்ச்சிகள் உள்ளன.

தென் அமெரிக்காவின் பிரேசில் நாட்டில் பரானா மாநிலத்தில் இவை அமைந்துள்ளன. குதிரையின் 'லாடம்' போன்ற வடிவமுள்ள இந்த நீர்வீழ்ச்சிகள் 4 கிலோமீற்றர் அகலம் கொண்டவை. இவை உலகின் இயற்கை அதிசயங்களில் அதிக சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்தவை. அத்துடன், தென் அமெரிக்க சுற்றுலா மையங்களில் இது முதலிடத்தைப் பெறுகின்றது. பிரேசில் மற்றும் ஆர்ஜன்டீனா நாடுகளின் எல்லைகளில் இகுவாசு மற்றும் பரானா நதிகள் இரண்டும் இணையும் இடத்திற்கு 19 கிலோமீற்றர் முன்னே இந்நீர்வீழ்ச்சிகளைக் காணலாம். இவை வட அமெரிக்காவின் 'நயாகரா' நீர்வீழ்ச்சியைவிட நான்கு மடங்கு பெரியவை. இந்த 275 நீர்வீழ்ச்சிகளும் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றன. 61 மீற்றர் உயரம் முதல் 81 மீற்றர் உயரம் வரை பல்வேறு உயரங்களில் இந்த நீர்வீழ்ச்சிகள் பாய்கின்றன.

'டெவில்ஸ் த்ரோட்' என்று அழைக்கப்படும் 'U' வடிவ நீர்வீழ்ச்சி, 150 மீற்றர் அகலமும் 700 மீற்றர் நீளமும் கொண்டது. இது ஆர்ஜன்டீனா-பிரேசில் எல்லையில் அமைந்துள்ளது. பிரேசில் ஆர்ஜன்டீனா இரண்டு நாடுகளுமே 'இகுவாசு' தேசிய பூங்காக்களை அமைத்து நீர்வீழ்ச்சிகளை பாதுகாக்கின்றன.

'இகுவாசு' என்றால், 'அதிக அளவு நீர்' என்று அர்த்தமாகும். இந்த அர்த்தத்தைக் குறிக்கும் சொல் 'குவாரனி' எனும் பராகுவே மொழியில் இருந்தே வந்தது.

நீர்வீழ்ச்சிகள் காணப்படும் இவ்வலயமானது வனாந்தரங்கள் நிறைந்த சின்னஞ்சிறு தீவுகள் பல அடங்கிய பிரதேசமாகும். 'இகுவாசு' நீர்வீழ்ச்சி அமைந்துள்ள பிரதேசத்தில் பிரேசில் மற்றும் ஆர்ஜன்டீனா நாடுகளுக்குச் சொந்தமான இரண்டு தேசிய வனப்பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. நீர்வீழ்ச்சிகளின் இயற்கை அழகைப் பாதுகாக்கவே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கடற்கரையிலிருந்தே, இந்நீர்வீழ்ச்சியைப் பார்வையிட பிரேசில் நாட்டில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நீர்வீழ்ச்சியையும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களையும் முதன்முதலாக உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் ஸ்பானிய நாடுகாண் பயணியான அல்வார் நுனெஸ் கபேசா டி வாக்கா என்பவராவார். இவர் 1541 இல் இதனைப் பார்வையிட்ட போது அதற்கு 'விக்டோரியா நீர்வீழ்ச்சி' என்ற பெயரே இருந்தது. இந்த நீர்வீழ்ச்சிகளை இரண்டு இடங்களிலிருந்து கண்டுகளிக்கலாம். பிரேசிலின் பரானா மாநிலத்தில் ஃபாஸ் டூ இகுவாசு மற்றும் ஆர்ஜன்டீனாவில் உள்ள புயர்டோ இக்வாசு ஆகிய இடங்களே அவை.

ஆர்ஜன்டீனாவில் பொம்மை ரயிலில் காட்டுக்குள் பயணித்து 'இகுவாசு' நீர்வீழ்ச்சியை அடைவது பரவசமானது. பிரேசிலில் நீண்ட தூரம் நீர் செல்லும் பள்ளமான பகுதிகள் ஊடாகச் சென்று நீர்வீழ்ச்சியை அடையலாம். 'இகுவாசு' நீர்வீழ்ச்சியில் நீர் குறைவாக இருக்கும்போது ஒரு வினாடிக்கு 300,000 லீற்றர் நீர் விழும். நீர் அதிகமாக விழும்போது ஒரு வினாடிக்கு 1,300,000 முதல் 1,500,000 லீற்றர் வரை நீர் விழும்.

## கெலபகொஸ் தீவுகள்


தென் அமெரிக்காவின் ஈக்வடோர் தேசிய வனப் பூங்கா வலயத்தைச் சேர்ந்த கெலபகொஸ் தீவுக்கூட்டங்கள் பசுபிக் சமுத்திரத்திலேயே அமைந்துள்ளன. ஈக்வடோர் பெருநிலப் பகுதியில் இருந்து 965 கி.மீற்றர் மேற்குப்புறமாக அமைந்துள்ளது. இங்கு வாழும் ஒருவகை





விசித்திர ஆமைகளே, இத்தீவுகள் உலகப் புகழ்பெற முக்கிய காரணமாக அமைந்தன.

'எரிமலைத் தீவுகள்' என அழைக்கப்படும் இவை 13 பிரதான தீவுகளையும் சிறிய 6 தீவுக்கூட்டங்களையும் கற்பாறைகள் நிறைந்த 107 மிகச் சிறிய தீவுகளையும் கொண்டவையாகும். இத்தீவுகள் உலகின் மிகவும் வெப்பமான அதாவது, 'புவியின் கருவறை' என அழைக்கப்படும் உட்பிரதேசத்தில் நிகழும் வெடிப்புகள் மற்றும் பூமியதிர்ச்சி, எரிமலைகள் என்பன நிறைந்ததொரு வலயத்தில் உள்ளன. இங்கு இன்னும் சில தீவுகள் உருவாகிய வண்ணமே இருக்கின்றன. இங்கு மிகவும் தொன்மையான தீவு சுமார் 5 மில்லியன் அல்லது 10 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் தோன்றியதெனக் கருதப்படுகின்றது. 2005 ஆம் ஆண்டு ஏற்பட்ட எரிமலை வெடிப்பின் காரணமாக, இஸபெல்லா



மற்றும் பேர்னென்டினா ஆகிய இரு தீவுகள் புதிதாக உருவாகின. அவற்றின் உருவாக்கம் இன்னும் பூர்த்தியாகவில்லை. இன்றும் இதன் உருவாக்கம் முடிவுறவில்லை.


ஈக்வடோர் நாட்டின் ஒரு மாகாணமாக கெலபாகொஸ் பெயரிடப்பட்டுள்ளதோடு, 30,000 மக்கள் மாத்திரமே அங்கு வாழ்கின்றனர். இங்கு அழிந்து வரும் பல உயிரினங்கள் வாழ்வதாக முதன்முதலாகக் கண்டுபிடித்து வெளிப்படுத்தியவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க அதிசயங்கள்

'பரிணாமவாதத்தின் தந்தை' என போற்றப்படும் சார்ள்ஸ் டார்வின் அவர்களே. அவரின் பரிணாம வாதம் தோன்றியது இத்தீவுக்கூட்டத்தில் வாழும் உயிரினங்களை ஆய்வு செய்ததன் மூலமே ஆகும். டார்வின் எழுதிய 'உயிரின பரிணாமம்' என்ற நூலின் (100 ஆவது வருட) நூற்றாண்டு நிகழ்வை கொண்டாடிய ஈக்வடோர் அரசு 1959 இல் கெலபாகொஸ் தீவுக்கூட்டத்தின் 97.5 வீத பகுதிகளை வனப்பூங்காவாகப் பிரகடனப்படுத்தியது. சார்ள்ஸ் டார்வின் நிதியம் இத்தீவுக்கூட்டத்தில் உயிரினப் பாதுகாப்பிற்கான விசேட வேலைத்திட்டத்தை விரிவுபடுத்தியது.

1978 இல் 'யுனெஸ்கோ' நிறுவனம் இதனை உலகின் மரபுரிமை பிரதேசமாக பிரகடனப்படுத்தியது. 1986 இல் இத்தீவுக்கூட்டத்தைச் சூழ்ந்த 70,000 கிலோமீற்றர் கடல் பிரதேசம் சமுத்திரப் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.



இத்தீவுகள் இன்றும் உலகெங்கிலும் உள்ள உயிரின, தாவர ஆய்வாளர்களின் சொர்க்கபூமியாகத் திகழ்கின்றன.


## அங்கோரொன்கோரோ வனப்பாதுகாப்பு பிரதேசம் (Ngorongoro Conservation Area)

'செரென்கெட்டி' வனப்பூங்கா வலயத்தில் அமைந்துள்ள மற்றொரு முக்கிய வனப்பூங்காவாக 'அங்கோரொன்கோரோ' வனப்பாதுகாப்பு வலயத்தைக் கருதலாம். இங்கு உலகிலேயே மிக விசாலமான எரிமலை வாய் மற்றும் 'அங்கோரொங்கோரோ' எரிமலைப் பள்ளத்தாக்கு என்பவற்றையும் காணலாம்.

ஆதி மனிதனின் மிகத்தொன்மையான எச்சங்கள் இங்குதான் கண்டுபிடிக்கப்பட்டன. செரென்கெட்டி வலயத்தில் அமைந்திருந்தாலும் 1959 இல் 'வனப் பாதுகாப்பு வலயமாக' பெயரிடப்பட்டு செரென்0கெட்டி தேசிய வனப்பூங்காவில் இருந்து பிரிக்கப்பட்டது. 8288 கிலோமீற்றர் வரை பரவியுள்ள இப்பிரதேசம் RCA என சுருக்கமாக அழைக்கப்படுகிறது. தன்சானியா அரசின்கீழ் உள்ள இப்பிரதேசம் 1979 இல் உலக மரபுரிமையாக்கப் பட்டது. உலகின் மிகப்பாரிய நெடுந்தூர மிருக இடம்பெயர்வு இதனூடாகவே நடைபெறுகின்றது.

## 'செரென்கெட்டி' விலங்குகள் இடப்பெயர்வு (Serengeti Migration)

'செரென்கெட்டி' விலங்கின இடம்பெயர்வானது




உலகின் இயற்கை அதிசயங்களில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. காலநிலை மாற்றத்தின் காரணமாக, வருடமொன்றிற்கு இருமுறை அதாவது, ஏப்ரல் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் சுமார் 20 லட்சம் மிருகங்கள் இரைதேடி நாடுவிட்டு நாடு செல்வதையே 'செரென்கெட்டி' இடப்பெயர்வு என அழைக்கின்றனர்.


இம்மிருகங்கள் ஒன்றல்ல இரண்டல்ல. சுமார் 800 கிலோமீற்றர் தூரம் வரை தமது உயிர்களைப் பணயமாக வைத்து உணவு தேடிச் செல்வது இப்பூவுலகில் நிகழும் மிகப்பாரியதும் நீண்ட நெடுந்தூரமுமான மிருக இடப்பெயர்வாக கருதப்படுகின்றது. இந்த இடப்பெயர்விற்கு இப்பெயர் வரக்காரணம் ஆபிரிக்கா கண்டத்தின் 'செரென்கெட்டி' எனும் பாரிய வனாந்தர வலயத்தின் வழியாக இந்த இடப்பெயர்வு நிகழ்வதே ஆகும்.

ஒக்டோபர் மாதத்தில் 2 மில்லியன் தாவர உண்ணிகள் பெருங்கூட்டமாக வடக்கு மலைப் பிரதேசங்களில் இருந்து மழைக்காலம் ஆரம்பித்ததும் தெற்குச் சமவெளிப் பிரதேசங்களை நோக்கித் தமது நீண்ட நெடும் பயணத்தை ஆரம்பிக்கின்றன. இப்பயணத்தின்போது பாரிய உயிராபத்துக்களை சந்திக்கவும் நேரும். அதன்பின் ஏப்ரல் மாதத்தில் மீண்டும் அம்மிருகங்கள் மேற்குப் பிரதேசங்களின் ஊடாக வட பிரதேசத்திற்குத் திரும்பி விடுகின்றன. இப் பயணத்தின்போது மீண்டும் உயிராபத்துக்கள் நிறைந்து காணப்படும். இதனை 'சுற்று இடப்பெயர்வு' (Circular Migration) என அழைப்பர். இதன் முழுப் பயணத்தூரம் 800 கிலோமீற்றர் ஆகும். தன்சானியாவில் இருந்து கென்யாவின் 'மசை மாரா' சாரணாலயம் வரை மேற்கொள்ளப்படும் இந்த நீண்ட நெடும் பயணத்தின்போது, வழியில் மாத்திரம் சுமார் 250,000 இற்கும் அதிகமான 'வில்டர்பீஸ்ட்' எனும் ஒருவகை மாடுகள் இறந்து விடுகின்றன என்பது மிகவும் சோகமான ஒரு விடயமாகும். இம்மரணங்கள் காயமடைதல் மிதமிஞ்சிய களைப்பு, எதிரிகளின் தாக்குதல் அல்லது எதிரிகளுக்கு இரையாதல் மூலம் ஏற்படுகின்றன.

'செரென்கெட்டி' வனாந்தர வலயமானது 60,000 சதுர கிலோமீற்றர் பரப்பளவுள்ள மரங்களற்ற அல்லது ஆங்காங்கே மரங்கள் காணப்படும் ஆபிரிக்க 'சவன்னா' புல்வெளிப் பூமியாகும். ஆபிரிக்க கண்டத்தின் தன்சானியா மற்றும் கென்யா நாடுகளுக்குரித்தான இந்தப் பூமி தேசிய வனப்பூங்கா, இயற்கை வனச்சரணாலயம், வேட்டையாடும் பிரதேசங்கள் என பல அம்சங்களைக் கொண்டது. 'செரென்கெட்டி' என்றால் ஆபிரிக்காவின் மசாய் மொழியில் 'முடிவற்ற சமவெளி' எனப் பொருள்படுகின்றது.

'செரென்கெட்டி' வனாந்தரத்தில் தாவர உண்ணிகள் சுமார் 2 மில்லியனும் மாமிச உண்ணிகள் ஆயிரக் கணக்கிலும் வாழ்கின்றன. இவற்றில் வில்டர்பீஸ்ட் மாடுகள், புள்ளிமான்கள், வரிக்குதிரைகள், காட்டெருமைகள் என்பன முக்கியமானவை.

-இரஞ்சித் ஜெயகர்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு நாடு
# நைஜீரியா



தலைநகரின் தோற்றம்

அபுஜா நுழைவாயில்

அபுஜா விண்வெளி மத்தியநிலையம்



அபுஜா மில்லேனியம் பூங்கா



ஜனாதிபதி

**இனக்குழுக்கள்:** 250 இற்கும் மேற்பட்ட இனக் குழுக்கள் காணப்படுகின்றன. அதில் ஹயுசா மற்றும் ஃபுலானி 29%, யொருபா 21%, இபோ 18%, இஜோவ் 10%, கனூரி 4%, இபிபையோ 3.5%, டிவ் 2.5%.

**சமயங்கள்:** இஸ்லாம் 50%, கிறிஸ்தவம் 40%, உள்ளூர் மத நம்பிக்கைகள் 10%.

**எழுத்தறிவு வீதம்** (2003): 68%.

**இணையத்தளக் குறியீடு:** .ng

**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** +234

**அரசு:** ஃபெடரல் அமைப்பிலான ஜனாதிபதிக் குடியரசு.

**சுதந்திரம்:** ஐக்கிய ராச்சியத்திடமிருந்து, தென் மற்றும் வட நைஜீரியா இணைக்கப்பட்டது-1914; சுதந்திரப் பிரகடனம்-1960 ஒக்டோபர் 1; குடியரசுப் பிரகடனம்-1963 ஒக்டோபர் 1.

**தேசிய விடுமுறை தினம்:** சுதந்திர தினம் (தேசிய தினம்) ஒக்டோபர் 1 ஆம் திகதி.

**ஜனாதிபதி** (2010): குட்லக் ஜொனதன்.

**உப ஜனாதிபதி:** நமாதி சம்போ.

**தேசிய கீதம்**

Arise, O compatriots,
Nigeria's call obey
To serve our Fatherland
With love and strength and faith…. என ஆரம்பமாகின்றது.

## புவியியல்

நைஜீரியா, ஆபிரிக்கா கண்டத்தில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த ஒரு நாடாகும். மேற்கு ஆபிரிக்காவில் கினியா வளைகுடாவில் அமைந்துள்ளது. பெனின், நைகர், கெமரூன் மற்றும் சாட் ஆகிய நாடுகள் நைஜீரியாவின் எல்லை நாடுகளாகும். நாட்டின் மிகப்பெரிய நதியாகிய நைகர் நதியானது மேற்குப் பகுதியூடாக ஊடறுத்து தெற்கு நோக்கிச் சென்று கினியா வளைகுடாவில் சங்கமமாகின்றது. தென் கரையோரப் பகுதியில் அடர்ந்த காடுகள் காணப்படுகின்றன. உட்பகுதியில் வன்மையான மரங்களைக்கொண்ட காடுகள் நிறையவே உள்ளன.

**மொத்தப்பரப்பு:** 356,667 ச.மைல் (923,768 ச.மைல்); **நிலப்பரப்பு:** 351,649 ச.மைல் (910,771 ச.மைல்).

**தலைநகரம்:** அபுஜா.

**பெரிய நகரங்கள்:** லாகோஸ், கானோ, இபடன், கடுனா.

**சனத்தொகை** (2010: 182,217,341

**நாணயம்:** நைரா.

**மொழிகள்:** ஆங்கிலம் (உத்தியோகபூர்வ மொழி), ஹயுசா, யொருபா, இபோ, ஃபுலானி, 200 இற்கும் மேற்பட்ட வேறு மொழிகளும் உள்ளன.

## வரலாறு

நைஜீரியாவின் முதல் குடிகளாக கருதப்படுவோர் NOK மக்களாகும். இவர்களின் குடியேற்றம் கி.மு 500 முதல் கி.பி 200 வரை இடம்பெற்றது. கனூரி, ஹயுசா, ஃபுலானி முதலிய இனத்தவர்கள் அதன் பின்னர் இங்கு வந்து குடியேறினர். இன்று நைஜீரியா என்று அழைக்கப்படும் பகுதிக்கு 13 ஆம் நூற்றாண்டில் இஸ்லாம் அறிமுகமானது. கனெம் பேரரசு 11 ஆம் நூற்றாண்டு முதல் 14 ஆம் நூற்றாண்டு வரையும், அதன்பின் 19 ஆம் நூற்றாண்டு வரை ஃபுலானி பேரரசின் ஆட்சியும் இங்கு நிலவின. 1851 இல் நைஜீரியாவின் முன்னாள் தலைநகராகிய லாகோஸ் நகரை பிரித்தானியர் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தனர். 1886 அளவில் முழுப் பிராந்தியத்தையும் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தனர். 1914 இல் நைஜீரியா பிரித்தானிய பிராந்திய காலனித்துவத்துடன் இணைக்கப்பட்டது.

## கலாசாரம்



உப ஜனாதிபதி

பல்லினக் குடிமக்களைக்கொண்ட நைஜீரியாவில் 250 இற்கும் மேற்பட்ட மாறுபட்ட மொழிகள் மற்றும் கலாசாரங்கள் காணப்படுகின்றன. ஹயுசா, ஃபுலானி, இக்போ, யொருபா ஆகிய இனங்களே நாட்டில் பெரும்பான்மையாக வாழ்கின்றன. இந்நாட்டு மக்களின் பிரதான உணவுகளாக கிழங்கு வகைகளும் மரக்கறி சூப் வகைகளும் காணப்படுகின்றன. நைஜீரிய இசையானது பாரம்பரிய இசையையும் நாகரிக இசையையும் கலந்திருக்கின்றது.

## காலநிலை

பொதுவாக வருடம் முழுவதும் வெப்பமான காலநிலையைக்கொண்ட நைஜீரியாவில் கோடை காலத்திற்கும் மாரிகாலத்திற்கும் இடையே மிகச் சிறிய காலநிலை வேறுபாடே நிலவுகின்றது. மாரிகாலத்தில் (ஏப்ரல் முதல் ஒக்டோபர் வரை) ஓரளவு மழைவீழ்ச்சி கிடைக்கும். நொவெம்பர் முதல் மார்ச் வரை உலர் காலநிலை நிலவுகின்றது.





தேசிய இலச்சினை

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2006): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்: 1,688; கையடக்கத் தொலைபேசிகள் 32,322. **வானொலி நிலையங்கள்** (2002): AM 83, FM 36, SW 11. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (2002): 3. **இணையத்தள வழங்குனர்கள்** (2007): 1,968, இணையத்தளப் பாவனையாளர்கள்: 8மில்லியன்.











ஒலுமோ கற்பாறை

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்** (2006): மொத்தம் 3,505 கி.மீற்றர். **பெருந்தெருக்கள்** (2006): மொத்தம் 194,394 கி.மீற்றர். **நீர்வழிப்போக்குவரத்து** (2007): 8,600 கி.மீற்றர். **துறையும் துறைமுகமும்:** கலபர், லாகோஸ், ஒன்னி, போர்ட்-ஹார்கோட், செபீல், வார்ரி. **விமானநிலையங்கள்** (2007): 70.

## பொருளாதாரம்


**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம்: 33%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** தானியங்கள், கொக்கோ, ஃபாம் எண்ணெய், மரவள்ளி, றப்பர், கால்நடைகள், மீன்.

**கைத்தொழில்கள்:** மசகு எண்ணெய், நிலக்கரி, ஃபாம் எண்ணெய், பருத்தி, றப்பர், மரத்தளபாடம், தோல் பொருட்கள்.

**இயற்கை வளங்கள்:** இயற்கை வாயு, பெற்றோலியம், தகரம், நிலக்கரி, சுண்ணக் கல். **ஏற்றுமதிகள்** (2009): பெற்றோலியமும் பெற்றோலிய உற்பத்திகளுள் கொக்கோ, றப்பர். **இறக்குமதிகள்** (2009): இயந்திரங்கள், ரசாயனப்பொருட்கள், போக்குவரத்து உதிரிப்பாகங்கள், கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2006): ஐக்கிய அமெரிக்கா, பிரேசில், ஸ்பெய்ன், சீனா, ஐக்கிய ராச்சியம், நெதர்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

✱ ஒக்புனிகே குகை ✱ ஒகுடா ஏரி ✱ இஜேடே வெந்நீரூற்று ✱ படக்ரி தெங்கு கடற்கரை ✱ ஒலுமோ கற்பாறை ✱ எரின்-இஜோஷா நீர்வீழ்ச்சி ✱ ஜொஸ் மேட்டுநிலம் ✱ தேசிய நூதனசாலை (லாகோஸ்).



ஜொஸ் மேட்டுநிலம்

லாகோஸ் துறைமுகம்

ஷிப் ஹௌஸ் பாதுகாப்பு தலைமையகம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகின் மிகக் குட்டையான மனிதர்



எட்வர்ட் நினோ

உலகின் மிகக் குட்டையான மனிதர் என கொலம்பியா நாட்டைச் சேர்ந்த 24 வயதுடைய எட்வர்ட் நினோ ஹெர்னாண்டஸ் என்பவர் கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார்.

2 அடி 3.46 அங்குல உயரமுடைய இவர் உலகின் மிகக் குட்டையான மனிதர் மட்டுமன்றி ஏற்கனவே இருந்த குட்டையான மனிதரை விட 4 செ.மீ குறைவான உயரமுடையவருமாவார். ஏற்கனவே மிகக் குட்டையான மனிதர் என்னும் இடத்தைப் பிடித்திருந்த சீனாவின் பிங்பிங் என்பவர் கடந்த மார்ச் 17 ஆம் திகதி மரணமடைந்தது வாசகர்கள் அறிந்ததே.

நினோ தற்பொழுது தனது குடும்பத்தவர்களின் வியாபாரத் தலம் ஒன்றில் பணிபுரிந்து வருகிறார். இவர் இசை, நடனம் ஆகிய கலைத் துறைகளில் மிகுந்த ஆர்வம் உள்ளவராக இருக்கிறார்.


கஜேந்திர தப்பா

மிகக் குட்டையான மனிதர் என அடையாளம் காணப்பட்டதையடுத்து இவர் கின்னஸ் உலக சாதனை தகவல் இணையத்தளத்திற்கு அளித்த பேட்டியின்போது கூறியதாவது; ''உலகின் மிகக் குட்டையான மனிதர் என அடையாளம் காணப்பட்டமைக்கு நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ஒவ்வொரு மனிதரும் வித்தியாசமானவரும் விந்தையானவருமாவார். எவ்வளவு அதிக அசாதாரண நிலையில் இருக்கிறீர்களோ அவ்வளவு அதிகமாகப் போராடவும் கடுமையாக உழைக்கவும் வேண்டும்''

இவர் சந்திக்க விரும்பும் மனிதர்களில் ஜெக்கி ஷான், சில்வெஸ்டர் ஸ்டெலொன் மற்றும் முன்னாள் கொலம்பிய ஜனாதிபதி அல்வாரோ யுரைப் ஆகியோர் முதல் இடத்தில் உள்ளனர். இவர் இரண்டு வயதுக்குப் பின்னர் வளரவே இல்லையென இவரின் தாயார் நொயெமி ஹெர்னாண்டஸ் கூறினார். இன்னும் ஒரு மாத காலத்திற்கே இந்த சிறப்பு நீடிக்கும். ஏனெனில் நேபாளத்தைச் சேர்ந்த கஜேந்திர தப்பா மாகர் என்பவர் எதிர்வரும் ஒக்டோபர் 14 ஆம் திகதி 18 வயதை அடைந்த பின்னர் உலகின் மிகக் குட்டையான மனிதர் என அடையாளம் காணப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 22 அங்குலம் மட்டுமே உயரமுடைய இவரே, உலகின் மிகக் குட்டையான 'டீன் ஏஜ்' பருவ வயதினர் என கின்னஸ் அடையாளம் கண்டுள்ளது.

## விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 3765
எம்.ஆதிப், தரம் - $4^{A}$, அல்-அஷ்ரக் தே.பாட., கல்முனை.


அங்.இல: 3766
செ.கிருஷாந்தன், தரம் - $8^{B}$, ரணபிம றோயல் கல்., கண்டி.


அங்.இல: 3767
ப.பிரணவன், தரம் - $8^{A}$, யாழ். இந்துக் கல்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3768
யூட் கிறிஷாந்தன், தரம் - $11^{A}$, வ.த.ம.ம.வித்., வவுனியா.


அங்.இல: 3769
வி.தனுஸ்காந்தன், யு.கே.ஜி-B, குட் ஹோப் பா.பாட., மாவனல்லை.


அங்.இல: 3770
சஸ்மா நஸ்பி, தரம் - $7^{G}$, மின்ஹாஜ் தே.பா., திக்குவல்லை.


அங்.இல: 3771
வே.மதுஷா, தரம் - $7^{C}$, சித்தி விநாயகர் இ.கல்., மன்னார்.


அங்.இல: 3772
யாசிர், தரம் - 11, சேர் ராசிக் பரீத் மு.வித்., மட்டக்குளி.


அங்.இல: 3773
எம்.சர்ராஜ், தரம் - 9, அல்-அஸ்கர் மு.ம.வித்., திருகோணமலை.


அங்.இல: 3774
எம்.அஸ்லம், தரம் - $10^{A}$, ஓட்டமாவடி தே.பாட., ஓட்டமாவடி.


அங்.இல: 3775
ம.தனுக்ஷன், தரம் - $10^{A}$, சாவகச்சேரி இ.கல்., சாவகச்சேரி.


அங்.இல: 3776
உ.உதயசங்கர், உயர் தரம், கிளிநொச்சி ம.கல்., கிளிநொச்சி.


Spoken English & Spoken Sinhala

இரு பாடநெறிகளையும் ஒரே தடவையில் வீட்டிலிருந்தே கற்கலாம்.

ஆங்கிலத்தில் மற்றும் சிங்களத்தில் அழகாக பேச வேண்டும் என்பது அனைவரினதும் ஆசை. ஆனால் வீட்டை விட்டு வெளியே சென்று கற்க நேரம் இல்லாத மாணவர்கள், இல்லத்தரசிகள், தொழில் புரிபவர்கள் தொழில் வாய்ப்பை எதிர்பார்த்து இருப்பவர்கள் இளைஞர்கள் யுவதிகள் அனைவருக்கும் வீட்டிலிருந்தே ஆங்கிலத்தையும் சிங்களத்தையும் கற்க அறிமுகமாகிறது.

Super English & Sinhala Home study Pack.

ஒரே நேரத்தில் இரு பாசைகளை கற்று இரண்டு சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளலாம்.

Super Home Study Pack ஒன்றில் அடங்குபவை.

12-ஆங்கில மற்றும் சிங்கள பேச்சு பயிற்சி புத்தகங்கள் — பாடப் புத்தகங்களில் காணப்படும் ஆங்கில மற்றும் சிங்கள பாடங்களின் பயிற்சிகளுக்கு விடைகளை எழுதி அனுப்ப வேண்டும். 1

The Necklace Story Book
த நெக்லஸ் சிறுகதை புத்தகம்.

ஆங்கில பேச்சு பயிற்சி Video Cd

1 ஆங்கில வாசிப்பு பயிற்சி Audiio Cd

3 ஆங்கில பேச்சு பயிற்சி Audiio Cd

Audiio Cd Guide Book
களின் வழி காட்டி புத்தகங்கள்.

சிங்கள பேச்சு பயிற்சி புத்தகம்
பூரண தமிழ் தமிழ் மொழி மூல விளக்கத்துடன்.

English-Tamil Dictionary
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட ஆங்கில அகராதி.

Tiny Tamil -Sinhala Dictionary
தமிழ் சொற்களுக்கு சிங்கள விளக்கம் தரும் அகராதி.

அழகிய Bag

விடை எழுதும் பத்திரங்கள்

13 பாடப் புத்தகங்களிலும் காணப்படும் பயிற்சிகளுக்கு விடைகளை எழுதி அனுப்ப வேண்டும். அவைகளை பிழை திருத்தி உங்களுக்கு மீண்டும் அனுப்பி வைக்கப்படும். இதன் மூலம் நீங்கள் பிழைகளை திருத்திக் கொள்ளலாம்.
சிங்கள பேச்சு பயிற்சிகளுக்கு விடை எழுதி அனுப்ப வேண்டும்.

பாடநெறி முடிவில்
Diploma In English
Diploma in Sinhala
சான்றிதழ்கள் வழங்கப்படும்.

UK ,Usa போன்ற நாடுகளில் உயர் கல்விக்காக செல்ல இருக்கும் மாணவர்களுக்கு சான்றிதழுடன் விசேட நற்சான்று பத்திரம் ஒன்று இலவசமாக வழங்கப்படும். இது உங்களுக்கு விசா பெற மேலதிக தகைமையாக கருதப்படும்.

Super English & Sinhala Study Pack. Rs: 3900/- 2900/-only.

Home Study Pack ஒன்றை பெறுவது எப்படி ?

நீங்கள் Study Pack ஐ பெற விரும்பின் பின்வருமாறு SMS செய்யுங்கள்.
VJS - உங்கள் பெயர் முகவரி வயது
0777-806 606 SMS செய்யுங்கள்.

Study pack அருகே இருக்கும் தபால் கந்தோருக்கு அனுப்பி வைக்கப்படும் பின்னர் ரூ 2900/-செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். அல்லது அருகே இருக்கும் பின்வரும் வங்கி ஒன்றில்

Bank Of Ceylon - 9956240
Commercial - 80-400-52 644
M.H.M.Ramzan Director Jei என்ற பெயரில் ரூ 2600/-செலுத்தி விட்டு உங்கள் விபரங்களை கவிதா - 0814-92 91 93 இலக்கத்திற்கு அறிவிக்கவும்.

Study Pack வீட்டுக்கே அனுப்பி வைக்கப்படும். தபால் நிலையத்திற்கு செல்ல தேவை இல்லை.



A/L 2010 பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கும் பாடசாலை ஆசிரியர்களுக்கும் விசேட விலை கழிவு வழங்கப்படும்.
தொடர்பு கொள்ளவும். ரொசான் .0777-806 606

ENGLISH STUDY PACK
P.O.BOX.119 KANDY.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றாடல் (சென்ற வாரத்தொடர்ச்சி...)





**நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்**

14. அரச இலச்சினையில் உள்ள நிறைகுடம் வெளிப்படுத்துவது எதனை?
   (1) தார்மீகம் (2) தன்னிறைவு
   (3) சௌபாக்கியம் (4) உலக நிலைப்பாடு

15. 
மஞ்சள் நிறப் பின்னணியில் காணப்படும் இவ்வீதிச் சமிக்ஞை எதனைக் குறிப்பிடுகின்றது?
   (1) முன்னால் பாதசாரிக்கடவை
   (2) முன்னால் சிறுவர் கடக்கும் பாதை
   (3) முன்னால் பாதுகாப்பான புகையிரதக் கடவை
   (4) முன்னால் பாதுகாப்பில்லாத புகையிரதக் கடவை

16. மகாவலி கங்கை கடலுடன் சங்கமமாகும் இடம் எது?
   (1) மாத்தளை (2) களுத்துறை
   (3) கொட்டியாரக்குடா (4) கொழும்பு

17. உலர் மின்கலங்கள் இரண்டும் மின்குமிழ் ஒன்றும் வயர் துண்டுகள் மூன்றும் கீழே உள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ளவாறு தொடுக்கப்பட்டுள்ளன. ஒளிரும் மின்குமிழைக்கொண்ட உரு எது?

(1) 
(2) 
(3) 
(4) 

18. அணிந்திருக்கும் உடையில் தீப்பிடித்திருக்கும் ஒருவரைக் காப்பாற்றுவதற்கு உடனடியாக எடுக்கப்பட வேண்டிய மிகப் பொருத்தமான நடவடிக்கை;
   (1) வைத்தியரிடம் கொண்டுசெல்லுதல்
   (2) உடையின் தீப்பிடித்த பகுதியைக் கிழித்தெறிதல்
   (3) நிலத்தில் உருளச் செய்தல்
   (4) மெல்லிய துணியால் போர்த்துதல்

19. உடலை நோய்களிலிருந்து பாதுகாக்கும் உணவு எது?
   (1) வல்லாரை (2) நெய் (3) சோறு (4) மீன்

20. உடலுக்குத் தேவையான சக்தியை வழங்கும் போசணைச் சத்து எது?
   (1) கனியுப்புக்கள் (2) காபோவைதரேற்று
   (3) நார்ப்பொருட்கள் (4) விற்றமின்

21. போமலினில் இடப்பட்ட மீனை உண்பதால் ஏற்படும் விளைவுக்கான நோய் அறிகுறி;
   (1) வயிற்று வலி உண்டாதல் (2) வாந்திபேதி ஏற்படல்
   (3) உதடுகள் வீங்குதல் (4) சொறிவு ஏற்படல்

22. மிக விரைவாக ஆவியாகி இழக்கப்படும் திரவம் எது?
   (1) தேங்காய் எண்ணெய் (2) ஸ்பிரிட்
   (3) நீர் (4) மரக்கறி எண்ணெய்

23. வீட்டுத் தோட்டத்திற்கு வேலி அமைப்பதற்கு மிகப் பொருத்தமான தடி எது?
   (1) வேம்பு (2) கிளிசிறியா (3) நாவல் (4) இலுப்பை

24. மத்திய மாகாணத்தின் தலைநகரம் எது?
   (1) திருகோணமலை (2) யாழ்ப்பாணம் (3) கண்டி (4) பதுளை

25. தேசப்படங்களில் நதிகளைக் காட்டுவதற்குப் பயன்படுத்தும் நியம நிறம் எது?
   (1) கபிலம் (2) சிவப்பு (3) கறுப்பு (4) நீலம்

26. வானில் எவ்வகையான முகிற்கூட்டம் உள்ளபோது வானம் தெளிவாகக் காணப்படும்?
   (1) திரள் முகில் (2) கருமுகில் (3) கீற்று முகில் (4) படை முகில்

27. காதுகளை மையமாகக்கொண்டு தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் ஊடகம் எது?

(1) 
(2) 
(3) 
(4) 




28. வெளிநாட்டுத் தபாலை இட வேண்டிய தபாற்பெட்டியின் நிறம் எது?
   (1) சிவப்பு (2) பச்சை (3) கறுப்பு (4) நீலம்

29. அஞ்சல் அலுவலகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளும் சேவை எது?
   (1) கடவுச் சீட்டைப் பெறுதல்
   (2) தேசிய அடையாள அட்டை பெறுதல்
   (3) காசுக் கட்டளைகளை அனுப்புதல்
   (4) துவிச்சக்கர வண்டி அனுமதிப்பத்திரம் பெறல்

30. விளக்குத் திரி வழியே விரைவில் மேல்நோக்கிச் செல்லும் திரவம் எது?
   (1) தேங்காய் எண்ணெய் (2) பசு நெய்
   (3) கடுகெண்ணெய் (4) மண்ணெண்ணெய்

★ *சரியான விடை எழுதுக.*

31. காற்று வலு மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் மாவட்டம் எது?
..................................................

32. இலங்கையில் இயற்கைத் துறைமுகம் எங்கு அமைந்துள்ளது?....................

33. வடமத்திய மாகாணத்தில் உள்ள மாவட்டங்கள் எவை?
.................................... ....................................

34. இலங்கையின் மிக உயரமான மலை எது?....................................

35. இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் யார்?..............................

36. கிராம சேவையாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளும் சேவைகள் 2 தருக?
   1. ..................................................
   2. ..................................................

37. இரும்புச்சத்துக் குறைபாட்டினால் ஏற்படும் நோய் எது?............................

38. சிங்கள மக்களின் தேசிய உணவு எது?....................................

★ விளையாட்டுகளின் படங்கள் கீழே காணப்படுகின்றன. அவற்றின் பெயர்களை எழுதுக.

39. 
..................................................

40. 
..................................................

### சுற்றாடல் - விடைகள்


*(செப்டெம்பர் 08, 15 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)*

| | | | | |
|---|---|---|---|---|
| (01) 2 | (02) 1 | (03) 2 | (04) 1 | (05) 3 |
| (06) 2 | (07) 3 | (08) 2 | (09) 2 | (10) 2 |
| (11) 2 | (12) 2 | (13) 3 | (14) 3 | (15) 3 |
| (16) 3 | (17) 3 | (18) 3 | (19) 1 | (20) 2 |
| (21) 3 | (22) 2 | (23) 2 | (24) 3 | (25) 4 |
| (26) 3 | (27) 3 | (28) 4 | (29) 3 | (30) 4 |

(31) அம்பாந்தோட்டை (32) திருகோணமலை
(33) அநுராதபுரம், பொலன்னறுவை
(34) பேதுறுதாலகால மலை (35) ஆனந்த சமரகோன்
(36) 1. வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழைப் பெறுதல்
2. நன்னடத்தை சான்றிதழ் பெறுதல்
(37) குருதிச்சோகை நோய் (38) பாற்சோறு
(39) வொலிபோல் (கரப்பந்தாட்டம்) (40) பல்லாங்குழி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'பணம்' அறிமுகமான வரலாறு



**அன்றாட பொருளாதாரக் கொடுக்கல்-வாங்கல்களை இலகுவாக்கும் வகையில் பணப்பரிமாற்றம் இருந்து வருகின்றது. அந்தவகையில் பணத்தின் தேவை எவ்வாறு; ஏன் ஏற்பட்டது?, அதன் தோற்றம் மற்றும் வளர்ச்சி என்பன பற்றி இக்கட்டுரை ஊடாக நோக்குவோம்**

## பண்டமாற்று காலம்

மானிட வரலாற்றின் ஆரம்பகாலத்தில் மனிதனுக்குப் பணம் தேவைப்படவில்லை. நாடோடியாக வேட்டையாடியும் விவசாயம் செய்தும் தமது தேவைகளை நிறைவு செய்துகொண்டு திருப்தியாக வாழ்ந்த காலமாக அக்காலம் இருந்தது. காலப்போக்கில் மனிதர்களில் பல்திறமைகள் உள்ளவர்கள் இருப்பது உணரப்பட்டது. இதனை அடுத்து பல்வேறு பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு மற்றவர்களிடையில் பரிமாறப்பட்டது. இவ்வாறு நிகழும் பண்டமாற்று முறையானது 'பா(ட்)டர் முறை' என்றழைக்கப்பட்டது.

எனினும், காலப்போக்கில் இந்தப் பண்டமாற்று முறையில் பல்வேறு சிக்கல்கள், பிரச்சினைகள் ஏற்பட்டன. உதாரணமாக; கால்நடை வளர்க்கும் ஒருவர் மற்றொருவருக்கு தன்னிடமிருக்கும் மாடுகளில் ஒன்றைக் கொடுத்து, அதற்குப் பதிலாக 100 மீன்களை வாங்குகிறார். இங்கு மீனைப் பெற்றுக்கொண்டவர் தனது தேவைக்கு மேலதிகமான மீன்களை பழுதடைய முன்னர் மேலும் பொருட்களுடன் பண்டமாற்றம் செய்ய வேண்டும். ஆனால், அவ்வாறு பரிமாற முடியாதவிடத்து மீன்கள் பழுதடைந்தால் மாட்டை வழங்கியவர் நஷ்டமடையும் நிலை ஏற்பட்டது.அத்துடன், பண்டமாற்றலினூடாக பெற்றுக்கொள்ளும் பொருட்களை இடத்திற்கிடம் கொண்டுசெல்வதிலும் பல்வேறு சிரமங்கள் எதிர்நோக்கப்பட்டன. மேலும், பண்டமாற்றுப் பொருட்களின் பெறுமதி, தேவை என்பன குறித்தும் சிக்கல்கள் எழுந்தன.

## இலங்கையில் பணப் புழக்கம்

இலங்கையில் முதன்முதல் பயன்படுத்தப்பட்ட நாணயம் சிங்கள மொழியில் 'கஹபன' என்றழைக்கப்பட்டது. கி.மு 3 ஆம் நூற்றாண்டிலேயே இவ்வாறான நாணயம் பயன்படுத்தப்பட்டது. அந்த நாணயத்தை வெளியிட்டவரின் முத்திரை அதில் பொறிக்கப்பட்டிருந்தது. அநுராதபுரக் காலத்தில் தர்மச்சக்கரம், யானை, அன்னம் மற்றும் மதச் சின்னங்கள் என்பன பொறிக்கப்பட்டு நாணயங்கள் வெளியிடப்பட்டன. அத்தோடு, செப்புத்தகடு, ரோமானிய நாணயங்கள், பித்தளை மற்றும் செப்பு நாணயம் என்பனவும் புழக்கத்தில் இருந்துள்ளன. அநுராதபுரக் காலத்தின் இறுதிக்கட்டத்தில் 'ரன் கஹவனு' என்ற ஒருவகை நாணயம் பயன்படுத்தப்பட்டுள்ளது. கி.மு 3-9 ஆம் நூற்றாண்டுகள் வரையில் இவ்வாறான நாணய வகைகளே புழக்கத்தில் இருந்தன.



கஹவனு






மஸ்ஸ நாணயம்



செப்புத்தகடு

## பணத்தின் ஆரம்பம்

பண்டமாற்றத்தில் நிலவிய பிரச்சினைகளுக்குத் தீர்வாக, பண்டங்களுக்குப் பதிலாக பல்வேறு பொருட்களை அவர்கள் பயன்படுத்தினர். பின்னர், அங்கீகரிக்கப்பட்ட மற்றுமொரு பரிமாற்ற முறையொன்றின் தேவை உணரப்பட்டது.அதனை அடுத்து சமூகத்தில் பல்வேறு பெறுமதிகளிலான பொருட்களை அதற்காகப் பயன்படுத்த மக்கள் உடன்பட்டனர். அத்தகைய பொருட்கள் முதலாவது பண அலகாகக் கருதப்பட்டன. அக்காலப் பகுதிகளில் மக்கள் பணமாக கற்கள், தானியவகைகள், சிப்பி ஓடுகள் என்பனவற்றைப் பயன்படுத்தினர்.



பணமாகப் பயன்படுத்தப்பட்ட சிப்பி ஓடுகள்



ஷெய் நாணயம்

இதேவேளை, சீனாவிலும் ஆபிரிக்கா மற்றும் பசுபிக் நாடுகளிலும் வாழ்ந்தவர்கள் ஆபரணங்களையும் கற்துண்டுகளையும் பணமாகப் பயன்படுத்தினர். தெற்குக் கடற்பிராந்திய 'யெப்' தீவு மக்கள் 20 ஆம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதி வரையில் கற்களையே பணமாகப் பயன்படுத்தியுள்ளனர். அவை 3-3.6 மீற்றர் விட்டமும் நடுவில் துளையுடைய உருளை அல்லது வட்ட வடிவ கற்களாகக் காணப்பட்டன. அவை 'ஷெய்' என அழைக்கப்பட்டன. அவற்றின் விட்டத்திற்கு ஏற்ப பெறுமதி வேறுபட்டதாக இருந்தது. எனினும், இவற்றை இடத்திற்கிடம் கொண்டுசெல்வது இலகுவானதாக இருக்கவில்லை. அதன் உரிமை ஒருவரில் இருந்து இன்னொருவருக்குக் கைமாறினாலும், அவை ஒரே இடத்தில் வைக்கப்பட்டதாகவே இருந்தன.



ரோமானிய நாணயங்கள்

அவ்வாறே, மத்திய தரைப்பிரதேசத்திலும் பெபிலோனியாவிலும் மக்கள் பணமாக உலோகங்களையே பயன்படுத்தினர். கி.மு 2500 ஆம் ஆண்டளவில் எகிப்தியர்கள் பணமாக உலோக மோதிரங்களைப் பயன்படுத்தியுள்ளனர். பெபிலோனிய வியாபாரிகள் சிலர் இன்றைய தாள்காசுக்கு நிகரான தாள்காசுகளைப் பயன்படுத்தியுள்ளனர். காலப்போக்கில் தடிப்பான தங்கம் அல்லது வெள்ளி உலோகத்தைக் கொண்டு கொடுக்கல்-வாங்கல்கள் நிகழ்ந்தது. இதன்படி, கி.மு 2000 ஆம் ஆண்டளவில் சீனாவில் பணமாக உலோகம் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## முதலாவது நாணயம்

உலோகங்கள் பயன்படுத்தப்படாமல் முதன்முதலாக நிஜ நாணயங்களைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவந்த நாடு துருக்கியாகும். கடலோடிகளான கிரேக்க வியாபாரிகள் இந்த நாணயங்களை கிரேக்கத்துக்கும் எடுத்துச் சென்றனர். பண்டைய கிரேக்கர்கள் நாணயங்களைத் தயாரிப்பதற்கு கலைகளுக்குக் கொடுக்கும் முக்கியத்தை வழங்கி, நாணய அச்சீட்டலைத் தொடர்ந்தனர். நாணயத்தின் நிறையை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு அரச இலச்சினையும் பொறிக்கப்பட்டிருந்தது. இந்த நாணயம் 'ஸ்டேடஸ்' என அழைக்கப்பட்டது. கி.மு 500 ஆம் நூற்றாண்டளவில் கிரேக்கத்தின் குடியேற்ற நாடுகளில் இத்தகைய நாணயம் அறிமுகமாகியது. ரோமானியர்கள் கி.மு 300 ஆம் ஆண்டில் நாணயத்தை அறிந்துகொண்டதோடு, தயாரிக்கும் பணியிலும் ஈடுபட்டனர். ரோமானியர்களால் தயாரிக்கப்பட்ட முதலாவது நாணயம் 'டினேரிஸ்' என்றழைக்கப்பட்டது. பிற்காலத்தில் ரோமானியர்களின் குடியேற்ற நாடுகளிலும் இந்நாணயம் அறிமுகம் செய்யப்பட்டது.

## பொலன்னறுவைக் காலப்பகுதி

இலங்கை மீது தமிழர் படையெடுப்பு நிகழ்ந்தது பொலன்னறுவை காலப்பகுதியிலாகும். அதன்பின்னர் தமிழ் மன்னர்களாலும் பலவிதமான நாணயங்கள் அறிமுகம் செய்யப்பட்டன. 'கொங்', 'சேர', 'பல்லவ', 'சோழ', 'சேது' ஆகிய நாணய வகைகளே அவர்களால் புழக்கத்திற்கு விடப்பட்டன. பின்னர் பொலன்னறுவை யுகத்தில் இருந்து தம்பதெனிய காலப்பகுதி வரையில் 'மஸ்ஸ' என்ற நாணயம் புழக்கத்தில் இருந்தது. முதலாவது விஜயபாகு மன்னர் அவரின் பெயரில் 'மஸ்ஸ' என்ற நாணயத்தை வெளியிட்டார். பிற்காலத்தில் வந்த மன்னர்களாலும் அவரவர் பெயர்களில் நாணயங்கள் வெளியிடப்பட்டன. முதலாவது பராக்கிரபாகு, நிஸ்ஸங்கமல்ல, லீலாவதி மகாராணி, சாகசமல்ல, தர்மாசோக, இரண்டாவது பராக்கிரமபாகு, புவனேகபாகு ஆகிய மன்னர்களே இவ்வாறு தமது பெயர்களில் நாணயங்களை வெளியிட்[illegible]



மஸ்ஸ நாணயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(12, 13 ஆம் பக்கங்களைப் பார்க்க...)

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# 'பணம்' அறிமுகமான வரலாறு




## கோட்டை காலம்

தம்பதெனிய காலப்பகுதிக்குப் பின்னர் கோட்டை காலப்பகுதியிலேயே நாணயம் வெளியிடப்பட்டது. 6 ஆம் பராக்கிரமபாகு மன்னன் சிங்கத்தின் உருவம் பொறித்த செப்பு நாணயங்களை அறிமுகம் செய்தார்.



சிங்கத்தின் உருவம் பொறித்த செப்பு நாணயம்

உலோக நாணயம்

## கண்டி யுகம்

கண்டி யுகத்தில் ஆட்சி செய்த மன்னர்கள் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட அழகிகளை மனைவியாக்கிக் கொண்டதாக வரலாறு கூறுகின்றது. இந்தியாவின் விஜய நகரத்துடன் வலுவான உறவு இருந்ததற்கு இது தகுந்த சான்றாகும். அதுமட்டுமல்லாது விஜய நகரில் பயன்படுத்தப்பட்ட பொன், வெள்ளி, செப்பு ஆகிய உலோகங்களினாலான நாணயங்கள் கண்டி ராச்சியத்திலும் பாவனையில் இருந்தன. அத்துடன், அரேபிய நாணயங்களும் இங்கு பாவனையில் இருந்துள்ளன. அவை பாரசீகத்தின் (இன்றைய ஈரான்) லார் நகரிலிருந்து வரவழைக்கப்பட்ட நாணயங்களாக இருந்துள்ளன.

## போர்த்துக்கேய நாணயம்

போர்த்துக்கேயர் ஆட்சியில் இந்நாட்டில் தங்கத்தினாலான நாணயங்கள் புழக்கத்தில் இருந்துள்ளன. அவை சென்கோம் (தங்க நாணயம்), செரனித் (வெள்ளி நாணயம்), (ட்)டெங்கு, செப்பு நாணயம் போன்ற வகைகளாகும்.



வெள்ளியிலான கொக்கி வடிவ நாணயம்

தங்க நாணயம்

மஸ்ஸ

## ஒல்லாந்தர் காலம்

ஒல்லாந்தர் கால நாணயங்களும் பயன்பாட்டில் இருந்துள்ளன. அவை 'தொய்து' மற்றும் 'துட்டு' என்றழைக்கப்பட்டன. அவற்றில் வீஓசி (VOC) ஆகிய எழுத்துக்களும் சின்னங்களும் பொறிக்கப்பட்டு இருந்துள்ளன. ஒல்லாந்தர் காலத்தில் இலங்கையில் திருகோணமலை, கொழும்பு, யாழ்ப்பாணம், காலி ஆகிய நான்கு நகரங்களில் நாணயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. அத்துடன், ஒல்லாந்தின் பல பிரதேசங்களில் நடைமுறையில் இருந்த நாணயங்களும் இங்கு பாவனைக்கு வந்தன. துட்டு, ஒலன்டியா, யுட்ரெச்டி, சீலன்டியா, தொய்து என்பன அவற்றில் சிலவாகும்.



செப்பு நாணயம்

VOC நாணயம்

## மத்திய வங்கி நிறுவப்படல்

1950, ஒகஸ்ட் 28 ஆம் திகதி இலங்கை மத்திய வங்கி நிறுவப்பட்டது. அதுவரையில் புழக்கத்தில் இருந்த நாணயத்தை வெளியிடும் உரிமை நிதி ஆணையாளரிடமே இருந்து வந்தது. இலங்கை மத்திய வங்கி ஏற்படுத்தப்பட்ட பின்னர் இலங்கையில் நாணயம் மற்றும் தாள்காசு என்பனவற்றை வெளியிடும் அதிகாரம் மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டது.



## பிரித்தானியர் காலம்



1796 ஆம் ஆண்டு தொடக்கம் பிரித்தானியர் நாணயங்களை வெளியிட்டனர். துட்டு, ரிக்ஸ் டொலர்,தொய்து என்ற அடிப்படையில் அவர்கள் இலங்கையில் நாணயங்களை அறிமுகம் செய்திருந்தனர். பின்னர் பிரித்தானியாவில் புழக்கத்தில் இருந்த நாணயங்களான எனா, பென்ஸ், பர்திஸ் ஆகிய நாணயங்களையும் குடியேற்ற நாடுகளில் அறிமுகம் செய்தனர். அதேபோன்று தூர கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட ரூபாய், பைசா ஆகிய நாணயங்களும் இலங்கையில் புழக்கத்திற்கு விடப்பட்டன. அதனைத் தொடர்ந்து கால் ரூபாய், அரை ரூபாய் முறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன.

1872 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதியில் இருந்தே இலங்கையில் முதன்முதலாக ரூபாய், சதம் என்ற நாணய அலகுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதன்பின்னர் 1/4 சதம், 1/2 சதம், 2 சதம், 5 சதம், 10 சதம், 25 சதம், 50 சதம் ஆகிய நாணயங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. அந்த நாணயங்களில் பிரித்தானிய மன்னரதும் ராணியினதும் முகம் பொறிக்கப்பட்டிருந்தது. இக்காலப் பகுதியில் இலங்கையிலும் இந்தியாவிலும் 1 ரூபாய் நாணயமும் பயன்படுத்தப்பட்டன.




## ஞாபகார்த்த நாணயம்

நிறைவு தினங்களை நினைவுகூரவும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளை நினைவுகூரும் வகையிலும் ஞாபகார்த்த நாணயம் வெளியிடப்படுகின்றது. போர்த்துக்கேய, ஒல்லாந்தர் ஆட்சிக்காலங்களிலும் இவ்வாறு ஞாபகார்த்த நாணயம் வெளியிடும் முறை இருந்து வந்திருக்கின்றது என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன.

## இலங்கையில் இதுவரை வெளியிடப்பட்டுள்ள ஞாபகார்த்த நாணயங்கள்

### 2500 புத்த ஜயந்தி (1957)

தகவல்களின்படி, 2500 புத்த ஜயந்தியை முன்னிட்டே இலங்கையில் முதன்முதலில் ஞாபகார்த்த நாணயம் வெளியிடப்பட்டுள்ளது. 1957 ஆம் ஆண்டிலேயே இந்த ஞாபகார்த்த நாணயம் வெளியிடப்பட்டுள்ளது. அதன்போது ரூபா 5 பெறுமதியான வெள்ளி நாணயமும் 1 ரூபா மதிப்புள்ள செப்பு நாணயமும் வெளியிடப்பட்டிருக்கின்றன.



### இரண்டாவது உலக உணவு மாநாடு (1968)

இரண்டாவது உலக உணவு மாநாட்டின்நிமித்தம், இலங்கையில் 1968 ஆம் ஆண்டு 2 ரூபா மதிப்புள்ள செப்பு, நிக்கல் கலந்த நாணயம் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அணிசேரா நாடுகளின் தலைவர்களின் ஐந்தாவது மாநாடு (1976)




கொழும்பில் 1976 ஆம் ஆண்டு நடைபெற்ற அணிசேரா நாடுகளின் தலைவர்கள் பங்குபற்றிய ஐந்தாவது மாநாட்டின் நினைவாக 5 ரூபா, 2 ரூபா பெறுமதிகளுடைய செப்பு, நிக்கல் நாணயங்கள் வெளியிடப்பட்டன.

## முதலாவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி பதவியேற்பு வைபவம் (1978)



இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஜே.ஆர்.ஜெயவர்தன பதவி யேற்றதை நினைவுகூரும் வகையில் 1978 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஒரு ரூபா மதிப்பு டைய நாணயம் ஒன்று வெளியிடப்பட்டது.

## சர்வஜன வாக்குரிமை கிடைத்ததன் பொன்விழா (1981)



சர்வஜன வாக்குரிமை கிடைத்து 50 ஆண்டுகள் நிறைவடைவதைக் குறிக்குமுகமாக, 1981 ஆம் ஆண்டு 5 ரூபா பெறுமதியான நாணயம் வெளியிடப்பட்டது.

## துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தை ஆரம்பித்தல் (1981)



துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தை ஆரம்பிப்பதை கொண்டாடுமுகமாக 1981 ஆம் ஆண்டு ரூபா 2 பெறுமதியுள்ள நாணயம் வெளியிடப்பட்டது.

## ஐ.நா.வின் சர்வதேச வீடமைப்பு வருடம் (1987)



ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச வீடமைப்பு வருடத் தினையிட்டு ரூபா 10 மதிப்புள்ள நாணயம் வெளியிடப்பட்டது.

## இலங்கை மத்திய வங்கியின் 40 ஆவது வருட நிறைவு (1990)



இலங்கை மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்டு 40 வருடங்கள் நிறைவடைந்ததை நினைவு கூருமுகமாக, 1990 ஆம் ஆண்டு ரூபா 500 மதிப்புள்ள நாணயம் வெளியிடப்பட்டது.

## V ஆவது தெற்காசிய பிராந்திய விளையாட்டு விழா (1991)



V ஆவது (ஐந்தாவது) தெற்காசிய பிராந்திய விளையாட்டு விழா 1991 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்றபோது, அதன் நினைவாக ரூபா 100 மற்றும் ரூபா 500 மதிப்புள்ள இரண்டு நாணயங்கள் வெளியிடப்பட்டன.

## ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச பதவியேற்று மூன்றாண்டுகள் பூர்த்தி (1992)



மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச பதவி யேற்று 3 வருடங்கள் பூர்த்தியடைந்ததையிட்டு, 1992 ஆம் ஆண்டு ரூபா 1 மதிப்புள்ள நாணயம் வெளியிடப்பட்டது.

## 2500 அநுபுது மிஹிந்து ஜயந்தி (1993)



அநுபுது மிஹிந்து ஜயந்தி கொண்டாடப் பட்டதையிட்டு, ரூபா 500 மதிப்புள்ள நாணயம் வெளியிடப்பட்டது.

## ஐ.நாவின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் பொன்விழா (1995)



ஐக்கிய நாடுகள் சபை யின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் 50 ஆவது வருட நிறைவினையிட்டு, 1995 ஆம் ஆண்டு ரூபா 2 மதிப்புள்ள நாணயம் வெளியிடப்பட்டது.

## ஐ.நாவின் பொன்விழா (1995)



ஐ.நா அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு 50 வருட நிறைவைக் (பொன்விழா) கொண்டாடுமுகமாக, ரூபா 5 பெறுமதியான நாணயம் வெளியிடப்பட்டது.

## ஐ.நா அமைப்பின் சிறுவர் நிதியம் ஆரம்பிக்கப்பட்டு 50 ஆவது வருட நிறைவு (1996)



ஐ.நா. அமைப்பின் சிறுவர் நிதியம் ஆரம் பிக்கப்பட்டு 1996 ஆம் ஆண்டு 50 வருடங்கள் நிறைவடைந்ததையிட்டு, ரூபா 1 மதிப்புள்ள நாணயம் வெளியிடப்பட்டது.

## இலங்கை சுதந்திரம் அடைந்து 50 ஆவது வருட நிறைவு (1998)



இலங்கை சுதந்திரம் அடைந்து 50 ஆவது வருட நிறைவினைக் (பொன்விழா) கொண்டாடுவதன் நிமித்தம், 1998 பெப்ரவரி 4 ஆம் திகதி ரூபா 5000, ரூபா 1000 ரூபா 10 ஆகிய பெறுமதிகளி லான நாணயங்கள் வெளியிடப்பட்டன. ரூபா 5000 நாணயம் 22 கரட் தங்கத்திலும் ரூபா 1000 வெள்ளியிலும் ரூபா 10 கலப்பு உலோகத்திலும் வெளியிடப்பட்டன.

## 1996 இல் கிரிக்கெட் உலகக் கிண்ணம் வெற்றி





இலங்கை கிரிக்கெட் அணி 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்டதை நிறைவுகூரும் வகையிலும் 1999 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக்கிண்ண போட்டிகளின் நிமித்தமும் இரண்டு நாணயங்கள் 1999 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டன. இதில் ரூபா 1000 வெள்ளியிலும் ரூபா 5 நாணயம் நிக்கல் மற்றும் பித்தளை கலந்ததாகவும் இருந்தன.

## இலங்கை ராணுவத்தின் பொன்விழா (1999)



இலங்கை ராணுவத் திற்கு 50 வருடங்கள் பூர்த்தியடைந்து பொன் விழா கொண்டாடப் பட்டதையிட்டு, 1999 ஆம் ஆண்டு ரூபா 1 மதிப்புள்ள நாணயம் நிக்கல் முலாம் பூசப்பட்டு வெளியிடப்பட்டது.

## இலங்கை மத்திய வங்கியின் பொன்விழா (2000)



இலங்கை மத்திய வங்கி பொன்விழா கொண்டா டியதன் நிமித்தம், 2000 ஆம் ஆண்டில் ரூபா 1000 மதிப்புள்ள வெள்ளி உலோகத்திலான ஞாபகார்த்த நாணயமொன்று வெளியிடப்பட்டது.

## கடற்படையின் பொன்விழா (2000)



இலங்கை கடற்படைக்கு 50 வருடங்கள் பூர்த்தியடைந்த தையிட்டு, 1 ரூபா மதிப்புள்ள நாணயம் ஒன்று வெளியிடப்பட்டது. இந்த நாண யம் செப்பு, நிக்கல் கலந்த உலோகத்தி னால் வெளியிடப்பட்டது.

## விமானப்படையின் பொன்விழா (2001)



இலங்கை விமானப்படை 2001 ஆம் ஆண்டு பொன் விழாவைக் கொண்டாடியது. இதனை யிட்டு, 1 ரூபா மதிப்புள்ள செப்பு, நிக்கல் கலந்த நாணயம் வெளியிடப்பட்டது.

## கொழும்புத் திட்டத்தின் பொன்விழா (2001)



ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான சர்வதேச அமைப்பான கொழும்புத் திட்டத்திற்கு 2001ஆம் ஆண் டில் 50 வருடங்கள் நிறைவடைந்ததை யிட்டு, செப்பு மற்றும் நிக்கல் கலந்த 2 ரூபா மதிப்புடைய நாணயம் வெளியிடப்பட்டது.

## சியாமோபாலி உபசம்பதா நிறுவி 250 வருடங்கள் நிறைவு (2003)



இலங்கையில் சியாமோபாலி பௌத்த பிரிவின் மேன்மை நிலையான உபசம்பதா நிறுவி 50 வருடங்கள் பூர்த்தியடைந்ததையிட்டு, 5 ரூபா மதிப்புடைய இரண்டு நாணயங்கள் வெளியிடப்பட்டன. இந்த நாணயங்களில் ஸ்ரீ சரணங்கர மற்றும் உபாலி தேரர்களின் உருவப்படங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

## 2550 புத்த ஜயந்தி (2006)



கௌதம புத்தர் பரிநிர்வாண மடைந்து (ஞானோதயம் பெற்று) 2006 ஆம் ஆண்டு 2550 வருடங்கள் பூர்த்தியடைந் ததன் நிமித்தம் 5 ரூபா, ரூபா 1500, ரூபா 2000 ஆகிய பெறுமதிகளிலான நாண யங்கள் வெளியிடப்பட்டன.

(14 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(12, 13 ஆம் பக்கங்களின் தொடர்ச்சி)

## உலக கிரிக்கெட் இரண்டாம் இடம் (2007)



இலங்கை கிரிக்கெட் அணி 2007 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டதைக் கொண்டாடும்முகமாக 5 ரூபா, ரூபா 1000 பெறுமதிகளிலான நாணயங்கள் வெளியிடப்பட்டன.

## ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 50 வருடங்கள் நிறைவு (2008)



ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 50 வருடங்கள் பூர்த்தியடைந்ததன் நிமித்தம் ரூபா 1000/=, ரூபா 2/= மதிப்புள்ள இரண்டு உலோக நாணயங்கள் வெளியிடப்பட்டன.

## இலங்கை சுங்கத்திற்கு 200 வருடங்கள் நிறைவு (2009)



சுங்கத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டு 200 வருடங்கள் நிறைவடைந்ததையிட்டு ரூபா 200/= பெறுமதியுடைய வெள்ளி நாணயம் வெளியிடப்பட்டது

## இலங்கை ராணுவத்திற்கு 60 வருடங்கள் (2009)



இலங்கை ராணுவத்தின் 60 ஆவது வருட பூர்த்தியையிட்டு ரூபா 1000/= மதிப்புள்ள வெள்ளி மற்றும் பித்தளையிலான இரு நாணயங்கள் வெளியிடப்பட்டன.

# ‘பணம்’ அறிமுகமான வரலாறு



நெப்போலியன் யுத்தத்தை சித்தரிக்கும் ஓவியம்

உலகில் தாள்காசு முதன்முதலில் பயன்படுத்தியது சீனாவில் ஆகும். 1200 ஆம் ஆண்டளவில் சீனா சென்ற இத்தாலி நாட்டைச் சேர்ந்த நாடுகாண் பயணியான மார்கோ போலோ அக்காலத்தில் சீனாவில் தாள்காசுகள் புழக்கத்தில் இருந்ததாகக் குறித்து வைத்துள்ளார். ஆனால், இந்த தாள்காசுகளில் பெறுமதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்றும் அவை பெறுமதி வாய்ந்த உலோகங்களின் கொள்வனவுக்காகப் பயன்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், தற்போது பாவனையிலுள்ள தாள்காசு முதலில் அறிமுகமாகியது 17 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து நாட்டில் இருந்த ஒரு சம்பிரதாயத்தை

## உலகில் தாள்காசு அறிமுகம்

அடிப்படையாக வைத்தாகும். அங்கு வாழ்ந்த மக்கள் அவர்களது தங்க ஆபரணங்களைப் பாதுகாத்து வைக்கும்முகமாக பொற்கொல்லர்களின் தங்க ஆபரணக் காப்பகத்தில் அவற்றை ஒப்படைத்தபோது, அந்தக் காப்பகத்தினால் ரசீது (சிட்டை) ஒன்று வழங்கப்பட்டது. இந்த ரசீதை பணமாகவும் பயன்படுத்தக்கூடியதாக இருந்ததோடு, வர்த்தகர்களாலும் இம்முறை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1650 ஆம் ஆண்டளவில் தேசிய வங்கிகளின் விரிவாக்கத்துடன், தாள்காசின் பயன்பாடு அதிகரித்தது. வங்கிகள் பணத்தைப் பெற்றுக்கொண்டு கடனாக தாள்காசுகளை வழங்கின. வட அமெரிக்காவில் 1685ஆம் ஆண்டளவில் தாள்காசுகள் புழக்கத்திற்கு வந்தன. கெனேடிய குடியேற்ற ஆட்சிக்காலத்தில் சீட்டு விளையாட்டில் ஈடுபட்டவர்களால் பயன்படுத்தப்பட்ட அட்டைகள் பணமாகப் பயன்படுத்தப்பட்டன. ஒவ்வொரு அட்டையிலும் ஒவ்வொரு பெறுமதி குறிக்கப்பட்டிருந்ததோடு, அதில் குடியேற்ற நாட்டு ஆளுநரின் கையெழுத்தும் பொறிக்கப்பட்டிருந்தது. சுமார் 70 வருடங்களாக இத்தகைய பணம் அங்கு பாவனையில் இருந்தது.



ஜேர்மன் மார்க்



அமெரிக்க டொலர்

குறிப்பிட்ட அளவிலான தங்கம் அல்லது வெள்ளியில் செலுத்துவது என்ற நிபந்தனையின் அடிப்படையில் சில தனிமனிதர்களாலும் தனியார் வங்கிகளாலும் பணம் வெளியிடப்பட்டது. 18 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இவ்வாறான தாள்காசு வெளியிடப்பட்டது. இம்முறையில் ஏற்பட்ட துரித வளர்ச்சி காரணமாக, அரசாங்கம் தலையிட்டு, நிதிச்சட்டங்களையும் நிபந்தனைகளையும் விதித்து அதன்கீழ் பண வெளியீட்டை மேற்கொண்டது. அத்தகைய தாள் மற்றும் நாணயங்களில் அவற்றின் பெறுமதி குறிப்பிடப்பட்டதோடு, வங்கிப் பத்திரங்களுக்கு தங்கத்தால் செலுத்துவதை அரசாங்கம் நிறுத்தியதால், தாள்காசு மற்றும் வங்கிப்பத்திரங்களின் மதிப்புக் குறைவு (மதிப்பிறக்கம்) ஏற்பட்டது.

மேலும், நெப்போலியனின் போர், இங்கிலாந்து சிவில் யுத்தம், அமெரிக்காவில் நெருக்கடி, முதலாம் உலக மகாயுத்தம் ஆகிய யுத்த நிலைமைகளின் பின்னர் ஜேர்மனி தேவைக்கு அதிகமாக தாள்காசினை வெளியிட்டதால், பணப்பரிமாற்றத்தில் பிரச்சினைகள் ஏற்பட்டு அக்கட்டமைப்பு சீர்குலைந்தது. இரண்டாம் உலகப் போரின் பின்னர் ஹங்கேரியிலும் இதேபோன்ற நிலை உருவாகியது. அந்நாட்டின் ‘பென்கோ’ என்ற நாணயத்திலும் மதிப்பிறக்கம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து நீண்டகாலமாக நடைமுறையில் இருந்த ‘தங்கக் கணக்கு’ முறை செயலிழந்ததோடு, 1930 ஆம்

**‘1950 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 28 ஆம் திகதி இலங்கை மத்திய வங்கி நிறுவப்பட்டது. அதுவரையில் பணத்தை வெளியிடும் உரிமை நிதி ஆணையாளர்களுக்கு உரியதாகவே இருந்து வந்தது. இலங்கை மத்திய வங்கி ஏற்படுத்தப்பட்ட பின்னர் அந்த அதிகாரம் மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டது’**

ஆண்டளவில் அந்த முறை கைவிடப்பட்டது. உலகில் ஏற்பட்ட கைத்தொழில் வளர்ச்சியினால் பொருட்களின் உற்பத்தி அதிகரிக்கலாயின. இந்தப் பொருட்களைப் பரிமாறுவதற்கு பணத்தின் தேவை ஏற்பட்டது. அதனால், ஒவ்வொரு நாடும் தமக்கே உரித்தான நிதி அலகுகளை நிர்ணயித்து, கொடுக்கல்-வாங்கல்களை மேற்கொள்ளலாயிற்று. இதற்கான நிர்வாகம் அரசாங்கத்தினால் நிறுவப்பட்ட திறைசேரி, மத்திய வங்கி அல்லது வேறு அதிகாரம் பெற்ற நிறுவன அமைப்புக்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் அனைத்து நாடுகளிலும் வணிக வங்கிகள் உருவாக்கப்பட்டு நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டன. இதனால், காசோலைப் பரிமாற்றமும் வளர்ச்சியடையலாயிற்று. காசோலைப் பரிமாற்றமானது பண மோசடி மற்றும் திருட்டு என்பவற்றைத் தடுக்க உதவின. உல்லாசப் பிரயாணிகளது பாதுகாப்புக் கருதி பிரயாண காசோலை (Travelers Cheque) அறிமுகப்படுத்தப்பட்டது. தொடர்ந்து தாள்காசு பரிமாற்றத்தின் பாதுகாப்பை உறுதிப்படும் வகையில் கடன் அட்டைப் பரிமாற்றம், இலத்திரனியல் நாணயம் என்று பல புதிய பரிணாமங்கள் உருவாகின. இவ்வாறாக கட்டம் கட்டமாக வளர்ச்சி கண்டு வரும் பணப்பரிமாற்றத்தின் மேலுமொரு வளர்ச்சியாக குறிப்பிட்ட சில பிராந்திய இணக்கப்பாட்டின் அடிப்படையில் பொது நாணயம் ஒன்றை பயன்படுத்தும் முறை அறிமுகமாகியது. இதற்கு சிறந்த உதாரணமாக; யூரோ நாணயத்தைக் குறிப்பிடலாம். அத்துடன், இந்நிலை மேலும் விரிவடைந்து முழு உலகிலும் ஒரே நாணயம் பரிமாறப்படும் நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**அமீர் ஹுஸைசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானின் கல்வி முறை



கிழக்காசியாவின் கரையோரமாக பசுபிக் செங்கடலில் அமைந்துள்ள, சுமார் 6800 தீவுக்கூட்டங்களைக் கொண்ட மக்களாட்சி நாடு ஜப்பானாகும். இந்நாட்டின் மொத்தப் பரப்பளவு 378,000 சதுர கி.மீ. சுமார் பதின்மூன்று கோடி மக்கள் கூட்டத்தைக் கொண்டுள்ள இது உலகில் எட்டாவது அதிகமான மக்கள் தொகையைக்கொண்ட நாடாகக் கருதப்படுகின்றது. 1868 ஆம் ஆண்டு முதல் டோக்கியோவே இந்நாட்டின் தலைநகராக விளங்குகின்றது. 'டியட்' என்றழைக்கப்படும் நாடாளுமன்ற அமைப்பைக்கொண்ட இந்நாட்டில் பிரதமராட்சி நிலவுகின்றது.

ஜப்பானியர் கல்வியை மிகவும் உயர்வாக மதிக்கின்றனர். ஜப்பானின் கல்வித்திட்டம் சுமார் நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். 99 சதவீத ஆரம்பக்கல்வி மாணவர்கள் அரச பாடசாலைகளிலேயே கல்வி கற்கின்றனர். உயர்நிலைப் பாடசாலை மாணவர்களில் 30 சதவீதமானோர் தனியார் பாடசாலைகளில் கல்வி கற்பதாகத் தகவல்கள் கூறுகின்றன.



ஒவ்வொரு ஜப்பானியக் குழந்தையும் 6 வயது முதல் 15 வயது வரை பாடசாலை செல்ல வேண்டுமென்ற நியதி உள்ளது. எனினும், பெற்றோர் கல்வி மீது கொண்டுள்ள ஆர்வம் காரணமாக தமது குழந்தைகளை 3 வயது முதல் முன்னிலைப் பாடசாலைகளுக்கு அனுப்பி விடுகின்றனர். ஜப்பானிய மாணவரின் ஆரம்பக் கல்வி 6 வயது முதல் 12 வயது வரையாகும்.







15 வயது முதல் அவர்கள் உயர்நிலைப் பாடசாலைகளில் கல்வி கற்பர். ஜப்பானிய மாணவர்களுக்குப் பதினெட்டு வயதாகும் போது அவர்கள் உயர்நிலைப் பொதுப் பாடசாலைகளுக்கோ, சிறப்புத் தொழிற்கல்விக்கூடங்களுக்கோ செல்வர். எல்லாக் கல்விக்கூடங்களும் நுழைவுப் பரீட்சை வைத்து, அதில் சித்தியடையும் மாணவர்களையே தம் கல்விக்கூடங்களில் அனுமதிப்பர். ஜப்பானில் நுழைவுப்பரீட்சை மிகக் கடுமையானதாகக் காணப்படுவதால், மாணவர்கள் தம் வழமையான வகுப்புகளுக்குச் செல்வதோடு, பிரத்தியேகமாக 'ஜுக்கு' அல்லது 'யோபிக்கோ' என்றழைக்கப்படும் ஆரம்ப வகுப்புகளுக்கும் செல்கின்றனர்.



அனைத்து ஜப்பானிய மாணவர்களும் ஆங்கிலக் கல்வியை மிகவும் விருப்பத்துடன் கற்று வருகின்றனர். ஜப்பானிய கல்வித் திட்டத்தில் ஜப்பானிய மொழி கற்க வேண்டியது கட்டாயமானதாகும்.

ஜப்பானில் கல்வியாண்டு ஏப்ரல் மாதத்தில் ஆரம்பமாகி மார்ச் மாதத்தில் முடிவடைகின்றது. வாரத்தில் ஆறு நாட்கள் பாடசாலை நடைபெறும். காலை 8.30 மணிக்கு ஆரம்பிக்கும் பாடசாலைகள் பி.ப 3.30 மணிக்கு முடிவடையும். மாலையில் மாணவர்கள் 'ஜுக்கு' வகுப்புகளுக்கு செல்லலாம். அல்லது விளையாட்டுக்களில் ஈடுபடலாம்.

நமது நாட்டைப் போலவே, ஆரம்பக்கல்வி கற்பிக்கும் வகுப்புக்களில் 40 மாணவர்கள் இருப்பர். மாணவர்கள் சீருடை அணிந்தே பாடசாலைகளுக்கு செல்வர். பாரம்பரியமாக மாணவர்கள் பித்தளை பொத்தான்கள் கொண்ட நீலம் அல்லது இதர நிறங்களிலான மேற்சட்டைகளோடு, கூடிய குட்டைக் காற்சட்டைகளை கோடை காலங்களில் அணிவர். மாணவியர் கடல் நீலநிறத்திலான பின்னப்பட்ட சட்டைகளை அணிந்து பாடசாலைக்குச் செல்வர்.

**-ஐ.ஏ.ஸத்தார்**



## தேசிய உற்பத்தித்திறன் செயலகம்

## தொழிற்தொடர்பு, மனிதவள அமைச்சு

NPS SRI LANKA

விஜய்

## உற்பத்தித்திறன் ஓவியப் போட்டி - 2010

### வினைத்திறனை வீட்டிலிருந்து ஆரம்பிப்போம்

அரச நிறுவனமாகிய தேசிய உற்பத்தித்திறன் நிறுவனமானது இம்முறையும் 2010 ஆம் ஆண்டிற்கான சித்திரப் போட்டியை நடத்துகின்றது.

**'வினைத்திறனை வீட்டிலிருந்தே ஆரம்பிப்போம்'** என்ற தலைப்பிலேயே இந்த சுவரொட்டி (போஸ்டர்) சித்திரப் போட்டி நடத்தப்படுகின்றது. நமது வீட்டில் வினைத்திறனை ஒழுங்காக கடைப்பிடித்தால்தான் நமது பாடசாலை, காரியாலயம் சமூகம் நாடு போன்றவற்றையும் வினைத்திறன் மிக்கதாக ஆக்கமுடியும். எனவே, வீட்டில் வினைத்திறனை மேற்கொண்டால் அது நாட்டின் மேம்பாட்டிற்கும் பயன்மிக்கதாக அமையும்.

எனவே, கீழ் காணப்படும் அம்சங்களைக் கவனத்தில் கொண்டு உங்களுடைய சுவரொட்டி சித்திரத்தை வரையமுடியும்.

1. வீட்டுத்தோட்டம் வினைத்திறன் மிக்க இடமாக எடுத்துக்காட்டி சித்திரம் வரையலாம்.
2. உங்களுடைய வீட்டை முறையாக அமைத்து இருக்கின்ற இட வசதிக்குள் கூடிய பயனைப் பெறுவதைக் காட்டும் சித்திரமாக அமையலாம்.
3. வீட்டின் பாதுகாப்பை எடுத்துக்காட்டும் விதமான சித்திரம்.
4. வீட்டின் அவசியமற்றவற்றை அப்புறப்படுதலும் அவசியமானவற்றை ஒழுங்குபடுத்தி சீராக வைத்தல்.
5. வீடானது சுத்தமும் சுகாதாரமும் மிக்கதாக இருப்பதான உணர்வை ஏற்படுத்தும் விதமான சித்திரம்.
6. வீட்டில் பொருளாதார ஸ்தீர நிலையானது, உயர்ந்த பழக்கவழக்கங்களை ஏற்படுத்தும் என்பதை விளக்குதல்.
7. வாழ்க்கையை இயல்பான தன்மை மிக்கதாக எடுத்துக்கொள்ளத்தக்க வழிமுறைகளை காட்டும் சித்திரங்கள்.
8. வீட்டில் நிதி கையாளுகை மற்றும் சிக்கனத்தை உணர்த்தும் சித்திரங்கள்.
9. நமது கலாசாரத்தைப் பாதுகாப்பதை உணர்த்தும் சித்திரங்கள்.

**இப்போட்டி 5 பிரிவுகளாக நடத்தப்படும்**

1. பாடசாலை மட்டம் - தரம் 1 தொடக்கம் 5 வரை
2. பாடசாலை மட்டம் - தரம் 6 தொடக்கம் 11வரை
3. பாடசாலை மட்டம் - தரம் 12 தொடக்கம் 13 வரை
4. பல்கலைக்கழக மட்டம் - பல்கலைக்கழக மாணவர்கள்
5. பகிரங்க மட்டம் - இலங்கையர் அனைவரும் கலந்து கொள்ளலாம்.

**ஓவியத்தின் அளவு**

அளவு - 18x24 அங்குலம்

'பிரிஸ்டல் போர்ட்' அல்லது ஓவியம் வரைவதற்கு பயன்படுத்தும் அட்டைகள், தாள்கள் எதையாவது பயன்படுத்தலாம்.

மொழி - தமிழ், சிங்களம், ஆங்கிலம்

**பரிசு விபரம்**

**பாடசாலை பிரிவு 1 மற்றும் 2**

1 ஆவது பரிசு - ரூபா 15,000 மற்றும் சான்றிதழ்
2 ஆவது பரிசு - ரூபா 10,000 மற்றும் சான்றிதழ்
3 ஆவது பரிசு - ரூபா 7,500 மற்றும் சான்றிதழ்

**பாடசாலை பிரிவு 3**

1 ஆவது பரிசு - ரூபா 20,000 மற்றும் சான்றிதழ்
2 ஆவது பரிசு - ரூபா 15,000 மற்றும் சான்றிதழ்
3 ஆவது பரிசு - ரூபா 10,000 மற்றும் சான்றிதழ்

**பல்கலைக்கழக மட்டம்/பகிரங்க மட்டம்**

1 ஆவது பரிசு - ரூபா 30,000 மற்றும் சான்றிதழ்
2 ஆவது பரிசு - ரூபா 20,000 மற்றும் சான்றிதழ்
3 ஆவது பரிசு - ரூபா 15,000 மற்றும் சான்றிதழ்

மேற்குறிப்பிட்ட வெற்றியாளர்களுக்கு மட்டுமன்றி தேர்வு செய்யப்படுகின்ற ஏனைய ஓவியங்களுக்கும் திறமைச் சான்றிதழ் வழங்கப்படும்.

உங்களது ஓவியங்களை உங்கள் பகுதிக்குரிய பிரதேச செயலகத்தின் தொழிற்தொடர்பு மற்றும் மனித வள அமைச்சின் உதவியாளரிடமும் கையளிக்கலாம்.

**போட்டி விதிமுறைகள்**

1. அனுப்பப்படுகின்ற ஓவியம் சொந்தப் படைப்பாக இருத்தல் வேண்டும்.
2. ஒருவர் எத்தனை ஓவியங்களையும் அனுப்பலாம். ஆனால், ஒன்றுக்கு மட்டுமே பரிசு வழங்கப்படும்.
3. பாடசாலை மாணவர்கள் தத்தமது பாடசாலை அதிபரின் மேற்பார்வையின் கீழ் ஓவியங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.
4. பாடசாலை மட்டத்தில் அரச, தனியார் மற்றும் சர்வதேச பாடசாலை மாணவர்களும் கலந்து கொள்ள முடியும்.
5. சகல பல்கலைக்கழக மாணவர்களும் கலந்து கொள்ளலாம்.
6. பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் தம்மை உறுதி செய்தல் வேண்டும்.
7. போட்டியாளர்கள் தமது ஓவியத்தின் பின்புறத்தில் இங்கு வழங்கப்பட்டுள்ள மாதிரிக் கூப்பனை ஒத்த கூப்பன் ஒன்றினைத் தயாரித்து நிரப்பி ஒட்டுதல் வேண்டும்.
8. போட்டிக்கு அனுப்பப்படும் ஓவியங்கள் அனைத்தும் நடுவர் குழுவொன்றினால் தேர்ந்தெடுக்கப்பட்டு பார்வைக்கு வைக்கப்படும். நடுவர் குழுவின் முடிவே இறுதித் தீர்ப்பாகும். வெற்றி பெறுவோருக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் கொழும்பில் வைத்து வழங்கப்படும்.
9. நடுவர் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஓவியங்கள் மற்றும் இவற்றை பிரசுரிக்கும் உரிமையோ, தேவை கருதி அவற்றைப் பயன்படுத்தும் உரிமையோ தேசிய உற்பத்தித்திறன் செயலகத்திற்கே உரித்துடையதாகும்.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

1. i. மாவட்டம் ..........
   போட்டிப் பிரிவு ..........
2. i. முதல் பெயர் ..........
   (ஆங்கில தனியெழுத்தில்)
   ii. முழுப் பெயர் ..........
3. i. முகவரி ..........
   (ஆங்கில தனியெழுத்தில்)
   ..........
   ..........
   ii. தொலைபேசி ..........
4. வயது ..........
5. i. பாடசாலையின் பெயர்/முகவரி
   ..........
   ..........
   ii. வகுப்பு (தரம்) ..........
6. பல்கலைக்கழக மாணவர்களாயின்
   i. பல்கலைக்கழகத்தின் பெயர்
   ..........
   ii. கல்வி கற்கும் பிரிவு (பீடம்)
   ..........

..........
விண்ணப்பதாரரின் கையொப்பம்

**மேற்கூறப்பட்டுள்ள விபரங்கள் முற்றிலும் உண்மையானவையே என உறுதிப்படுத்துகின்றேன்.**

..........
பாடசாலை அதிபர்/பீடாதிபதி
(கையொப்பம்/றப்பர் முத்திரை)


**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 2010.10.15**
**அனுப்ப வேண்டிய முகவரி :**
**பணிப்பாளர்,**
**தேசிய உற்பத்தித்திறன் செயலகம்,**
**இல 318, ஹைலெவல் வீதி, கொழும்பு-06.**

ஊடக அனுசரணை: விஜய் விஜய

பரிசு அனுசரணை: O-KAY

மேலதிக விபரங்களுக்கு:- தொலைபேசி 011-2812163/6, தொலைநகல் 011 - 2812162, மின்னஞ்சல் - nposl@nps.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நாம் இனி வரும் பாடங்களில் உடல் உறுப்புகளைத் தனித்தனியாக வரைந்து பயிற்சி பெறுவோம். உறுப்புகளை சரியான வடிவில் கீறிப் பயிற்சி பெறுவது மிகவும் முக்கியமானது.

# ஓவியம் வரைவோம் - 16

வழங்குபவர் - ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப்

## காது

இது முகத்தில் மூக்கிற்கு நேராக அமைந்துள்ள உறுப்பாகும்.

**பயிற்சி:**

- A படத்தில் காட்டியவாறு ரேகையொன்றை வரைந்துகொள்ளுங்கள்.
- B யில் காட்டப்பட்டுள்ளவாறு உட்புறமாக மற்றுமொரு ரேகையை வரையுங்கள்.
- அதன்பின்னர், C படத்தில் உள்ளவாறு காதை வரைந்துகொள்ளுங்கள்.
- D யில் காது முகத்தில் எவ்விடத்தில் அமைந்துள்ளது என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.
- I, II ஆகிய படங்கள் பக்கப்பார்வையில் காது அமைந்துள்ள முறையை சித்தரிக்கின்றன.
- E, F படங்களும் பக்கப்பார்வையில் காது அமைந்துள்ள முறையை சித்தரிக்கின்றன.

## விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



களுத்துறையைச் சேர்ந்த பைரூஸ்- கரீமா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா பஹ்மா, 07.09.2010 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல் - தும்ரா நிஸார்)*



பதுளையைச் சேர்ந்த முருகையா-நிர்மலா தம்பதியரின் செல்வப் புதல்வி எம்.கிருஷ்னி, 12.09.2010 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் இறைவன் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.



வலப்பனை, மகா ஊவாவைச் சேர்ந்த ஜே.ஜே.சாள்ஸ், 16.09.2010 அன்று தனது ஒன்பதாவது பிறந்த தினத்தைக் கொண்டாடவுள்ளார். இவரைக் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் புனித சாள்ஸ் பெரோமியோவின் அருள் பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல் : லூட்ஸ் மேரி)*



பத்கொல கொல்ல, கலேவலையைச் சேர்ந்த மொயிஸ்-ஹலீமுன் நிஸா தம்பதியரின் செல்வப் புதல்வன் மொஹமட் முஸான், 16.09.2010 அன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

## கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எஃப்.மஹீஷா, தரம் - 9B,
அல்-மின்ஹாஜ் தே.பாட.,
ஹபுகஸ்தலாவை.



வி.செந்தமிழ்செல்வி,
தரம் - 7, இறங்களை த.ம.வித்.,
இறங்களை.



என்.பிறவீன், தரம் - 10,
மன்னம்பிட்டி த.ம.வித்.,
மன்னம்பிட்டி.




கே.பிரசாந்தி, தரம் - 11B,
கொட்டகலை த.ம.வித்.,
கொட்டகலை.



கே.அனுஷன், தரம் - 8H,
வ.த.ம.ம.வித்., வவுனியா.




சி.கவிப்பிரியா,
தரம் - 5C, கதிரேசன் இ.ம.கல்.,
நாவலப்பிட்டி.



எம்.மௌபிர், தரம் - 9A,
அந்-நூர் தே.பாட., ஓட்டமாவடி



ஷாமிளா கபூர், தரம் - 7,
மோபிறே கல்., கண்டி.




எஃப்.ஹிமா,
பாலர் பாடசாலை, ஹெட்டிபொல.



எஃப்.ஷிம்லா, தரம் - 6,
அல்-ஹுமைரா மு.வித்.,
குளியாப்பிட்டிய.




அ.மம்ஷாட், தரம் - 3A,
வெலம்பொட மு.ம.வித்.,
வெலம்பொட.



க.துலக்ஷனா, தரம் - 4V,
வின்சன் ம.உ/தர தே.பாட.,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காகத்துடன் சேர்ந்து வாழ கனேரிப் பறவை விருப்பம்

கனேரிப் பறவை கூறியதைக் கேட்ட காகம் மேலும் பல கேள்விகளைக் கேட்டது. "கூண்டில் நீ என்ன செய்துகொண்டிருந்தாய்?"

"நான் நன்றாகப் பாடுவேன்..."

"எங்கே பாடு, பார்ப்போம்"

கனேரிப் பறவை பாடிற்று. காகம் தலையை ஒரு பக்கம் சாய்த்துக்கொண்டு ஆச்சரியப்பட்டது. "இதையா நீ பாட்டு என்கிறாய்? இந்த மாதிரிப் பாட்டுக்கா உன் எஜமானர்கள் உனக்கு இரை கொடுத்தார்கள். அசடர்கள். இரை கொடுப்பது அசல் பறவைகளுக்கு உதாரணமாக, என் போன்ற பறவைக்குக் கொடுக்க வேண்டும். கொஞ்ச நேரத்துக்கு முன்னர் நான் கத்தியதைக் கேட்டு, சோம்பேறிப் பூனை வாஸ்கா வேலியிலிருந்து உருண்டு விழுந்தது. அது அல்லவா பாட்டு!"

"எனக்கு வாஸ்காவைத் தெரியும். எல்லாவற்றையும் விடப் பயங்கரமான பிராணி அது. எங்கள் கூண்டுக்கு எத்தனை தரம் நெருங்கி வந்தது தெரியுமா? அதன் பச்சை விழிகளில் பொறி பறந்தபடி, மயிர்களை நீட்டிக் கொண்டிருக்கும்"

"அட சிலவற்றுக்கு அது பயங்கரமானது. சிலவற்றுக்கு அது அவ்வாறில்லை. சரி, இதைப் பற்றிப் பிறகு பேசுவோம்"

"என்ன இருந்தாலும் நீ உண்மையான பறவை என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டாகவில்லை..."

"என்னை நம்புங்கள், அத்தை, நான் பறவைதான். அசல் பறவை. எல்லாக் கனேரிகளும் பறவைகளே..."

"நல்லது, நல்லது, பார்ப்போம்... ஆனால் நீ எப்படி வாழப் போகிறாய்?"

"எனக்கு வேண்டியது கொஞ்சந்தான். சில தானிய மணிகள், ஒரு துண்டு சர்க்கரை, வற்றல் ரொட்டித் துண்டு ஒன்று, இவற்றைத் தின்றால் எனக்கு வயிறு நிறைந்துவிடும்"

"அடேயப்பா, எப்பேர்ப்பட்ட சொகுசுக்காரி நீ! ஊம்.. சர்க்கரை இல்லாமல் சமாளித்துக்கொள். தானிய மணிகளை எப்படியாவது தேடிக் கொள்வாய். அத்துடன், மொத்தத்தில் உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது. என்னோடு சேர்ந்து வாழ விருப்பமா? பிர்ச் மரத்தின் மேல் எனக்கு ஓர் அருமையான கூடு இருக்கிறது..."

"நன்றி. ஆனால், இந்தச் சிட்டுக்குருவிகள்.."

"நீ என்னோடு இருக்கப் போகிறாய். அதனால், எதுவும் உன்னை தீண்டத் துணியாது. குருவிகள் மட்டும் அல்ல, அந்தப் பூனை வாஸ்காகூட என் சுபாவத்தை அறியும். அத்துடன், எனக்கு நீண்ட நேரம் பேசுவது பிடிக்காது" கனேரிப் பறவை உடனே உற்சாகம் அடைந்து காகத்துடன் பறந்து போயிற்று. வெறும் பேச்சு அல்ல, கூடு அருமையானதுதான். இன்னும் வற்றல் ரொட்டித் துண்டுகளும் சர்க்கரையும் கிடைத்ததால்... காகமும் கனேரிப் பறவையும் ஒரே கூட்டில் ஒன்றாக வாழத் தொடங்கின. காகம் சிலவேளைகளில் பொடுபொடுத்தாலும் கெட்ட பறவை அல்ல. அதனுடைய சுபாவத்தில் இருந்த மூக்கியமான குறை அது எல்லாவற்றின் மேலும் பொறாமைப்படுவதும் தனக்கு அநீதி இழைக்கப்படுவதாக நினைப்பதும்தான்.

உள்ளதைச் சொன்னால், காகமும் கனேரிப் பறவையும் ஒன்றை ஒன்று புரிந்து கொள்ளவில்லை. இந்த கட்டற்ற வாழ்க்கை கனேரிப் பறவைக்குப் புரியவில்லை. காக்கையோ, கூண்டு வாழ்க்கையைப் புரிந்து கொள்ளவில்லை. "சொல்லுங்கள், அத்தை. உங்களுக்கு ஒருபோதும் எவரும் தானியம் போடவில்லையா? ஊம் ஒரு தானிய மணிகூட?" என்று ஆச்சரியப்பட்டது கனேரிப் பறவை.

"எப்படிப்பட்ட அசடு நீ... தானியமாவது ஒன்றாவது? தடியால் அடித்தோ, கல் எறிந்தோ யாரேனும் எம்மைக் கொன்று விடக்கூடாதே என்று எப்போதும் நாம் விழிப்போடு இருக்க வேண்டும். மனிதர்கள் மிகவும் கெட்டவர்கள்..." இந்தப் பேச்சைக் கனேரிப் பறவையால் ஒப்புக்கொள்ளவே முடியவில்லை. ஏனென்றால், மனிதர்கள் அதற்கு இரை கொடுத்தார்கள். ஒருவேளை, காகத்துக்குத்தான் இப்படித் தோன்றுகிறதோ என்னவோ என்று நினைத்தது. ஆனால், மனிதர்களின் கெட்ட குணத்தைத் தானே கண்டுகொள்ளக் கனேரிப் பறவைக்கு விரைவில் சந்தர்ப்பம் கிடைத்தது.

(தொடரும்...)





# புத்தியுள்ள மகன்

பணக்கார வயோதிபர் ஒருவர் கதிர்காம யாத்திரை செல்ல ஆசைப்பட்டார். அது போக்குவரத்து வசதி இல்லாத காலம். கதிர்காமம் போய் திரும்பி வர பல மாதங்கள் ஆகும். வனப்பகுதி வழியாகச் செல்லும்போது, சிங்கம், புலி தாக்கி இறந்தும் போகலாம். அதனால், புனித யாத்திரை புறப்பட்டவர், தனது சொத்துக்களை விற்றுப் பணமாக்கி மூன்று மகன்களுக்கும் பிரித்துக் கொடுத்துவிட்டார். தனக்கு என்று எதுவும் வைத்துக் கொள்ளவில்லை. திரும்பி வருவோம் என்பதும் உறுதியில்லை. ஒருவேளை அப்படியே திரும்பி வந்தால் அதிர்ஷ்டக்காரர் என்றுதான் சொல்லவேண்டும். அவ்வாறே, அவரும் ஆறு மாத காலத்தின்பின் பத்திரமாகத் திரும்பி வந்துவிட்டார். தனது ஒவ்வொரு மகன்களும் எந்த நிலையில் இருக்கின்றனர் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பினார்.

மூத்த மகன் வீட்டுக்குச் சென்றார். "மகனே! நலமா? உன் மனைவி, குழந்தைகள் நலமா? வாழ்க்கை எப்படி ஓடுகிறது? நான் கொடுத்த பணத்தை என்ன செய்தாய்?" என்று நேரடியாகக் கேட்காமல் சுற்றி வளைத்துக் கேட்டார்.

"நீங்கள் கொடுத்த பணத்தைப் பார்த்ததும் என் மனைவி, தனக்கு நகைகள் பட்டுபுடவை வேண்டும் என்றாள். அந்தப் பணத்திற்கு அவற்றை எல்லாம் நான் வாங்கிக்கொடுத்துவிட்டேன். தற்போது தினக்கூலி வேலைக்குச் சென்றுதான் காலம் ஓடுகிறது. அதனால், நீங்கள் கொடுத்த பணத்தால் எனக்கு எந்தப் பயனும் இல்லையப்பா" என்று சலித்துக்கொண்டான் அவன்.

மற்றைய மகன் எப்படியிருக்கிறான் என்று பார்க்க அவன் வீடு சென்றார் தந்தையார். "மகனே! உன் வாழ்க்கை எப்படியிருக்கிறது? நான் கொடுத்த பணத்தை என்ன செய்தாய்?" என்று நேரடியாகவே கேட்டுவிட்டார்.

"பத்திரமாக அப்படியே வைத்திருக்கிறேன் அப்பா. அதிலிருந்து ஒரு சதம்கூட எடுக்கவில்லை. அப்படியே அந்தப் பணத்தை நெற்குதிருக்கு அடியில் ஒரு குழி தோண்டிப் புதைத்துப் பத்திரமாக வைத்துள்ளேன். எடுத்துக் காண்பிக்கட்டுமா தந்தையே?" என்றான்.

அவனைவிட இவன் கொஞ்சம் பரவாயில்லை என்று நினைத்துக்கொண்டார். மூன்றாவது மகனிடம் சென்றார். "என்னப்பா... நான் கொடுத்த பணத்தை என்ன செய்தாய்? நீ நலமாக இருக்கிறாயா? கதிர்காமம் போனாலும் உங்கள் நினைப்புத்தான். எப்படி இருக்கிறீர்களோ, என்ன செய்கிறீர்களோ என்று நினைத்துக் கொண்டிருந்தேன்" என்றார்.

"எங்களைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் நீங்கள் புனித யாத்திரையே போயிருக்க வேண்டியதில்லையே. இங்கிருந்துகொண்டே நாங்கள் எப்படி இருக்கிறோம் என்று பார்த்துக் கொண்டிருந்திருக்கலாமே! பணத்தைப் பற்றிக் கேட்டீர்கள் அல்லவா? அதை மூலதனமாக வைத்து ஒரு சிறிய பெட்டிக்கடையை ஆரம்பித்தேன். நம் ஊரில் கடையே இல்லையே? தற்போது என் கடை ஊருக்கே பெரிதும் உபயோகமாக இருக்கிறது. எனக்கும் நல்ல இலாபம். இவ்வளவுக்கும் குறைந்த லாபம் வைத்துத்தான் விற்கிறேன். அப்படியும் நிறைய விற்பதால் இலாபம் அதிகரித்துவிட்டது. கடையிலுள்ள சரக்கு, கையிலுள்ள ரொக்கம் எல்லாம் பெருகி இருக்கிறது. இந்த ஆறுமாத காலமாக, கடை வியாபாரத்தில் வந்த இலாபத்தில்தான் குடும்பமே நடந்தது" என்று கூறினான்.

பின்னர், "அப்பா! என் வீட்டிலேயே இருங்கள். நீங்கள் கடையில் அமர்ந்து கல்லாவை பார்த்துக்கொண்டால் போதும்... நான், சரக்குகள் எடுத்து வருவது போன்ற வெளி வேலைகளைச் செய்கிறேன். இன்னொரு கடையும் மலிவான விலைக்கு வருகிறது அப்பா... அதையும் வாங்கிப் போடப் போகிறேன்" என்றான் மகன்.

அதிசயித்துப் போனார் தந்தையார். ஒன்றைப் பத்தாக்கும் புத்திசாலித்தனம் வேண்டும். அதைச் சின்ன மகன் நன்கு தெரிந்து வைத்துள்ளான் என்பதை நினைத்து மகிழ்ந்தார். மூன்று பேருக்கும் ஒரே மாதிரியாகத்தான் பணம் கொடுத்தார். இருந்தும் மூவரும் அந்தப் பணத்தைப் பயன்படுத்திக்கொண்ட முறையில்தான் எவ்வளவு வேறுபாடு. அதனால்தான் பணம் சம்பந்தமான விடயங்களில் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளவேண்டும் என்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் அனிலுக்கும் ராஜாவுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

අනිල්: රාජා අද අපේ තාත්තා අලුත් රූපවාහිනියක් ගෙනාවා.
ராஜா அத அபே தாத்தா அலுத் ரூபவாஹினியக் கெனாவா.
அனில்: ராஜா இன்று எங்களுடைய அப்பா புதிய தொலைக்காட்சி ஒன்றை கொண்டுவந்தார்.



රාජා: ඇත්තද? ලොකු එකක්ද?
எத்தத? லொகு எகக்த?
ராஜா: உண்மையாகவா? பெரியதொன்றா?

අනිල්: ඔව් ලොකු වර්ණ රූපවාහිනියක්.
ஒவ் லொகு வர்ண ரூபவாஹினியக்.
அனில்: ஆம் பெரியதொரு வர்ணத் தொலைக்காட்சி.

රාජා: ඇයි ඔයාලගේ තිබුණ රූපවාහිනිය කෝ?
எய் ஒயாலகே திபுண ரூபவாஹினிய கோ?
ராஜா: ஏன் உங்களிடம் இருந்த தொலைக்காட்சி எங்கே?

අනිල්: ඒක කැඩුණා රාජා.
ஏக கெடுணா ராஜா.
அனில்: அது உடைந்துவிட்டது ராஜா.

රාජා: ඒක හදන්න දුන්නේ නැද්ද?
ஏக ஹதன்ன துன்னே நெத்த?
ராஜா: அதை திருத்துவதற்குக் கொடுக்கவில்லையா?

අනිල්: දුන්නා. ඒක හදන්න බැහැලු. ඒක හදන සල්ලිවලට අලුත් එකක් ගන්න පුළුවන් කිව්වා.
துன்னா. ஏக ஹதன்ன பெஹெலு. ஏக ஹதன சல்லிவலட அலுத் எகக் கன்ன புலுவன் கிவ்வா.
அனில்: கொடுத்தோம். அதனை திருத்த முடியாதாம். திருத்துகிற பணத்தில் புதியதொரு தொலைக்காட்சியை வாங்கலாம் என்றனர்.



රාජා: මම සවස එන්නම්කෝ බලන්න.
மம சவச என்னம்கோ பலன்ன.
ராஜா: நான் பின்னேரம் வருகிறேன் பார்ப்பதற்கு.

අනිල්: හොඳයි රාජා.
ஹொந்தய் ராஜா.
அனில்: நல்லது ராஜா.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

*உதாரணம்:* அப்பா புதிய தொலைக்காட்சி ஒன்றை வாங்கிவந்தார்.
තාත්තා අලුත් රූපවාහිනියක් ගෙනාවා.

i. பெரியதொரு வர்ணத் தொலைக்காட்சி.
..............................................................................
ii. ஏன் உங்களிடம் இருந்த தொலைக்காட்சி எங்கே?
..............................................................................
iii. நான் பின்னேரம் வருகிறேன்.
..............................................................................






நடைபெற்று முடிந்துள்ள சில கருமங்களை, தகவல்களாக (Informations) தெரிவிப்பதற்கும், நிகழ்கால வினைமுற்று வாக்கியங்களை பொதுவாகக் கையாள்வதுண்டு. அத்தகைய சில வாக்கியங்களை இங்கே அவதானிப்போம்.

(அ) I have found a new pen.
நான் புதிய பேனா ஒன்றைக் கண்டெடுத்துள்ளேன்.

**குறிப்பு:** ***மேற்படி வாக்கியத்தின்படி, வினைச்சொற்களின் அர்த்தம் பின்வருமாறு;***

Have found - கண்டெடுத்துள்ளேன்.
(Compound Verb - கூட்டு வினைச்சொல்)

(ஆ) You have applied for a job.
நீ ஒரு தொழிலுக்கு விண்ணப்பித்துள்ளாய்.

* Have applied - விண்ணப்பித்துள்ளாய்.
(Compound Verb - கூட்டு வினைச்சொல்)

(இ) I have completed my work.
நான் எனது வேலையை பூர்த்தி செய்துவிட்டேன்.

* Have completed - பூர்த்தி செய்துவிட்டேன்.
(Compound Verb - கூட்டு வினைச்சொல்)

(ஈ) You have forgotten my name.
நீ எனது பெயரை மறந்துவிட்டாய்.

* Have forgotten - மறந்துவிட்டாய்.
(Compound Verb - கூட்டு வினைச்சொல்)

(உ) They have come back to Sri Lanka.
அவர்கள் இலங்கைக்குத் திரும்பி வந்துவிட்டனர்.

* Have come - வந்துவிட்டனர்.
(Compound Verb - கூட்டு வினைச்சொல்)

(ஊ) His beard has grown.
அவனுடைய தாடி (தாடை மயிர் ) வளர்ந்துவிட்டது.

* Has grown - வளர்ந்து விட்டது.
(Compound Verb - கூட்டு வினைச்சொல்)

(எ) That tree has grown well.
அந்த மரம் நன்றாக வளர்ந்துவிட்டது.

* Has grown - வளர்ந்துவிட்டது.
(Compound Verb - கூட்டு வினைச்சொல்)

(ஏ) She has heard that news.
அவள் அந்தச் செய்தியைக் கேள்வியுற்றுவிட்டாள்.

* Has heard - கேள்வியுற்றுவிட்டாள்.
(Compound Verb - கூட்டு வினைச்சொல்)

(ஐ) You have heard that news.
நீ அந்தச் செய்தியைக் கேள்வியுற்றுவிட்டாய்.

* Have heard - கேள்வியுற்றுவிட்டாய்.
(Compound Verb - கூட்டு வினைச்சொல்)

(ஒ) They have done a good job.
அவர்கள் நல்ல கருமம் ஒன்றைச் செய்துள்ளனர்.

* Have done - செய்துள்ளனர்.
(Compound Verb - கூட்டு வினைச்சொல்)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மற்றுமொரு எண்ணெய் பரணில் வெடிப்பு

அமெரிக்காவின் லூஸியானா பகுதிக்கு அருகாமையிலுள்ள கடற்பரப்பில் எண்ணெய் அகழ்வுப் பரண் ஒன்று வெடித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால், பாரிய அளவில் எண்ணெய் கசிவு ஏற்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

லூஸியானா கரையிலிருந்து 160 கி.மீற்றர் கடல் மைல் தூரத்திலேயே இந்த வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. எனினும், இங்கு பணியாற்றிய ஊழியர்களை மீட்டுப் பணியினர் காப்பாற்றியுள்ளனர்.

# இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை சந்திப்பு



## இஸ்ரேல்-பலஸ்தீன தலைவர்கள் இணக்கம்

மத்திய கிழக்கு சமாதானப் பேச்சுக்கள் இருபது மாதங்களின் பின்னர் அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் மீண்டும் ஆரம்பமாகின. இஸ்ரேல், பாலஸ்தீனப் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு இஸ்ரேல் பிரதமர் பென்ஜமின் நெதன்யாஹு, பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் ஆகியோர் இந்த முதல்கட்டப் பேச்சு வார்த்தைகளில் இணக்கம் கண்டுள்ளனர்.

அறுபது வருடங்களுக்கு அதிகமாக நீண்டுகொண்டே செல்கின்ற இஸ்ரேல்-பலஸ்தீனப் பிரச்சினைக்கு இரண்டு வருடங்களுக்குள் தீர்வினை எட்டும் எதிர்பார்ப்பில் ஆரம்பமாகியிருக்கும் மேற்படி பேச்சுவார்த்தைகளுக்கு நடுநிலை வகிக்கும் நாடாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி ஒபாமாவின் அழைப்பின் பேரிலேயே இவ்விரு தலைவர்களும் வொஷிங்டன் வந்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளனர். இதன்படி, அடுத்தகட்டப் பேச்சு வார்த்தைகள் செப்டெம்பர் 14 ஆம், 15 ஆம் திகதிகளில் எகிப்தில் நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# அன்னை தெரேசாவிற்கு முத்திரை வெளியீடு




*அன்னை தெரேசாவை கௌரவிக்கும் வகையில் அவரது படம் பொறித்த முத்திரையொன்றை அமெரிக்கா வெளியிட்டுள்ளது.*


*ஐம்பது வருடங்களுக்கு மேல் இந்தியாவில் நோயாளிகள் மற்றும் ஆதரவற்றோர் ஆகியோருக்கு சேவையாற்றி உலகின் கவனத்தை ஈர்த்த அன்னை தெரேசாவின் நினைவு முத்திரையானது அமெரிக்கா வொஷிங்டன் நகரில் நடைபெற்ற அன்னை தெரேசாவின் 13 ஆவது ஆண்டு நினைவுதின விழாவின்போது வெளியிடப்பட்டது.*

*1950 ஆம் ஆண்டில் அறநிலையமொன்றை உருவாக்கிய அன்னை தெரேசாவிற்கு 1979 ஆம் ஆண்டில் சமாதானத்திற்கான 'நொபெல்' பரிசு வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.*

*அவ்வாறே, 1997 ஆம் ஆண்டில் அமெரிக்காவும் அன்னை தெரேசாவுக்கு தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவித்தது.*

*அமெரிக்காவின் பிரபல ஓவியரான இரண்டாம் தோமஸ் பிளக்ஸியர் என்பவரினால் இந்த முத்திரையானது வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

# உலக அறிவை வளர்த்துக் கொள்வோம்...!



✱ இந்தியாவின் முதலாவது ஜனாதிபதி யார்?

**டொக்டர் ராஜேந்திர பிரசாத் (1950-1962)**

✱ நெப்போலியன் பொனபோட் பிறந்த நாடாக குறிப்பிடப்படுவது?



**குரோஷியா**

✱ தொழில்நுட்பப் புரட்சி முதன்முதலாக எந்த நாட்டில் ஆரம்பமாகியது?



**இங்கிலாந்து**

✱ தாஜ்மஹால் யாரால் கட்டப்பட்டது?

**சாஜஹான்**

✱ சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட வருடம் எது?

**1863**

✱ கிறிஸ்டோபர் கொலம்பஸ் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?



**இத்தாலி**

✱ 1981 ஆம் ஆண்டில் உலக நாடுகளைச் சேர்ந்த இரண்டு தலைவர்கள் கொல்லப்பட்டனர். அவர்கள் யார்?

**ஜனாதிபதி ரஹ்மான் (பங்களாதேஷ்)**
**ஜனாதிபதி அன்வர் சதாக் (எகிப்து)**

✱ இந்தியாவின் முன்னாள் பிரதமரான இந்திராகாந்தி கொல்லப்பட்ட வருடம்?



**1984**

✱ 1988 ஆம்ஆண்டில் விமான விபத்தில் கொல்லப்பட்ட பாகிஸ்தான் தலைவர் யார்?



**ஸியா உல் ஹக்**

✱ கடதாசி (தாள்) நோட்டுக்களை உலகிற்கு அறிமுகப்படுத்திய நாடு எது?

**சீனா**

✱ உலகிலேயே மிகவும் பழைமை வாய்ந்த கட்டடமாகக் கருதப்படுவது எது? அது எந்த நாட்டில் அமைந்துள்ளது?



**ஜப்பான் நாட்டின் ஹொரோயுஜி விகாரை**

✱ சர்வாதிகாரி ஹிட்லர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?



**ஜேர்மனி**

✱ முதலாவது உலக மகாயுத்தம் முடிவடைந்த வருடம்?

**1914 ஆம் ஆண்டு**

✱ ஆங்கில மொழி பேசாது இங்கிலாந்தில் வாழ்ந்த மன்னர் யார்?



**முதலாவது ஜோர்ஜ் மன்னர்**

✱ ஆதி கிரேக்க தத்துவ ஞானிகளாக கருதப்படுபவர்கள் யார்?



**சோக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டோட்டில்**

## அற்லஸ் கேள்வி - 273

**கேள்வி:** இஸ்ரேல்-பலஸ்தீனம் அடுத்தகட்டப் பேச்சுவார்த்தைகள் எந்த நாட்டில் நடைபெறவுள்ளது?

**சரியான விடை..................................**

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே**
**உலகைக் காண்போம், கேள்வி - 273,**
**விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

## போட்டி இல - 271 இன் சரியான விடை: 33

**பரிசு பெறுவோர்**

சதாசிவம் கஜந்தன்,
மத்திய வீதி, காரைதீவு-05.

செ.பிரேம்குமார்,
மே/பா ப.விஜி,
முத்துமாரி அம்மன் வீதி, தோற்பிட்டி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

வி.தனுஷிகா குமாரி,
50/B, அம்பாக்கோட்டை, கெங்கல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெட்ச் ஃபிக்ஸிங்-ஸ்பொட் ஃபிக்ஸிங் இரண்டிலும் உள்ள வேறுபாடு என்ன?

இன்று கிரிக்கெட் உலகில் பரபரப்பாகப் பேசப்படுகின்ற வார்த்தைதான் 'மெட்ச் ஃபிக்ஸிங்', 'ஸ்பொட் ஃபிக்ஸிங்' என்ற வார்த்தைகளாகும். இந்த இரண்டுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

அதாவது, மெட்ச் ஃபிக்ஸிங் என்பது போட்டியின் முடிவையே மாற்றும் வகையில் எதிரணிக்கு வெற்றி வாய்ப்பை ஏற்படுத்தி விளையாடுவதாகும். 'ஸ்பொட் ஃபிக்ஸிங்' என்பது சற்று மாறுபட்டதாகும். அதாவது, ஒரு போட்டியில் வீரரின் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் விலை பேசப்படுவதே ஸ்பொட் ஃபிக்ஸிங் ஆகும்.

உதாரணமாக, ஒரு பந்து வீச்சாளரை எடுத்துக்கொண்டால் சூதாட்டத் தரகருக்கும் அந்தப் பந்து வீச்சாளருக்கும் இடையில் சூதாட்ட ஒப்பந்தம் இருக்குமாயின், குறித்த சூதாட்ட நபர் குறித்த பந்து வீச்சாளரிடம் இவ்வாறுதான் பந்து வீசவேண்டும். எத்தனை ஓட்டங்களை வழங்கவேண்டும். எத்தனை நோ போள்களைப் போடவேண்டும். எத்தனை வைட் போள்களைப் போட வேண்டும் என்று சில அறிவுறுத்தல்களை வழங்குவார். அதற்கமைய, அந்தப் பந்து வீச்சாளரும் பந்துகளை வீசி ஓட்டங்களைக் கொடுப்பார். இதில் எவ்வாறு சூதாட்டத் தரகர் இலாபம் ஈட்டுகின்றார் என்ற சந்தேகம் உங்களுக்கு எழக்கூடும். அதாவது, குறித்த பந்து வீச்சாளர் தனது








பந்து வீச்சில் எத்தனை ஓட்டங்களைக் கொடுப்பார், எத்தனை வைட் போள், நோ போள்களைப் போடுவார் என்று வெளியே அநேகர் பந்தயங்களைப் பிடிப்பதுண்டு. அந்த பந்தயப் பணங்கள் பாரிய பந்தய புக்கிகளிலே செலுத்தப்படுகின்றன. அதற்கமைய, இவ்வாறு பெருமளவு பணத்தைப் பெறுகின்ற 'புக்கி' நிறுவனங்கள் பணம் கட்டியவர்களின் பந்தயம் தவறாக அமைவதற்காகவே, குறித்த வீரர்களை விலை கொடுத்து வாங்கித் தமது விருப்பம் போல் ஆட்டுவிக்கின்றனர். இதன்மூலம் ரசிகர்களால் பந்தயம் பிடிக்கப்பட்ட பணத்தை மீண்டும் பலமடங்காக செலுத்த வேண்டிய தேவை அந்த நிறுவனங்களுக்கு ஏற்படாது முழுப்பணத்தையும் தாங்களே சுருட்டிக் கொள்ளமுடியும். இதற்காகத்தான் பந்தயத்தரகர்களின் மூலம் இந்த ஸ்பொட் ஃபிக்ஸிங்கை அவர்கள் செய்கின்றனர்.



## சூதாட்டப் புகார் திட்டமிட்ட சதி வேலையாக இருக்குமா?

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் சிலர் சூதாட்ட தரகருடாகப் பணம் பெற்றதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுத் தொடர்பாக பல்வேறுபட்ட கருத்துக்கள் வெளியாகியுள்ளன. அதாவது, இது இந்தியாவின் 'றோ' உளவு அமைப்பின் திட்டமிட்ட சதி வேலையாக இருக்கலாம் என்று சில பாகிஸ்தான் ஊடகங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இந்த சூதாட்டக்காரரை 50,000 பவுண்ட்ஸ் பணத்தை லஞ்சமாகக் கொடுத்தே 'றோ' அவரை வழிநடத்தியிருப்பதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, குறித்த சூதாட்டக்காரரிடமிருந்து இன்னுமொரு நபர் பணம் பெறும் வீடியோக் காட்சியே சாட்சியமாக காட்டப்படுகின்றது. ஆனால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பணத்தைப் பெறுபவரின் முகம் தெரியாத வகையிலேயே வீடியோப் படம் பிடிக்கப்பட்டுள்ளது. இதுவும்கூட சந்தேகங்களை எழுப்புவதாகவே உள்ளது.

மேலும், சூதாட்டக்காரர்கள் எத்தனை நோ போள் வீச வேண்டும் என்று கூறுவதும், அவ்வாறே குறித்த பந்து வீச்சாளர் மறுநாள் நோ போள் வீசும் காட்சியும் காட்டப்படுகின்றது. எனினும், குறித்த போட்டிகள் முடிவடைந்த பின்னர், அதற்குத் தக்கபடி உருவாக்கப்பட்ட வீடியோக் காட்சிகளாகவும் கூட அது இருக்கலாம் எனவும் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. அதாவது, போட்டியில் எந்தெந்த சந்தர்ப்பங்களில் நோ போள் வீசப்பட்டதோ, அந்த 'நோ போள்'கள் தாங்கள் கூறியே வீசப்பட்டவை என்ற தோற்றத்தை ஏற்படுத்துவதற்காக,பிந்தி நடத்தப்பட்ட படப்பிடிப்பாகவும் அது இருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, "பாகிஸ்தான், இலங்கை அணிகளின் மீது மாத்திரம் ஏன் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் எழுகின்றன" என்ற கேள்வியை இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க உள்ளூர் தனியார் தொலைக்காட்சியின் கலந்துரையாடல் நிகழ்ச்சியொன்றில் தெரிவித்துள்ளார்.

"ஆசிய நாடுகளில் உலக அளவில் பாகிஸ்தானும் இலங்கையும் சிறந்த அணிகளாக ஜொலிப்பதை விரும்பாத சக்திகளின் சதியாகவும் இது இருக்கலாம்" என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பாகிஸ்தான் வீரர்களின் சொத்துக்கள் மதிப்பீடு

### அந்நாட்டு அரசாங்கம் உத்தரவு

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களில் சிலர் 'மெட்ச் ஃபிக்ஸிங்' மற்றும் ஸ்பொட் ஃபிக்ஸிங் ஆகிய மோசடிகளில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளமையால் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களின் சொத்துவிபரங்களையிட்டு ஆராய்ந்து விசாரணை நடத்துமாறு அந்நாட்டு அரசாங்கம் அதிகாரிகளுக்குப் பணித்துள்ளது. இதன்படி, வீரர்களின் அசையும் சொத்துக்கள், அசையா சொத்துக்கள், வங்கிக் கணக்குகள், நிதி கொடுக்கல் வாங்கல் விபரங்கள், சொந்தமாக உள்ள வாகனங்கள், ஆபரணங்கள் ஆகிய விபரங்கள் திரட்டப்படவுள்ளன.



மேலும், கடந்த ஐந்து வருடங்களில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையினால் கிரிக்கெட் வீரர்களுக்கு எவ்வளவு நிதி கொடுக்கப்பட்டுள்ளது போன்ற கணக்குகளும் கேட்கப்பட்டுள்ளன. அதற்கமைய, வீரர்கள் பெற்ற நேரடி உழைப்பிலான நிதி இருப்பையும் அவர்களது சொத்துக்களில் உள்ள இருப்பையும் ஒப்பிட்டுப் பார்த்து அவர்கள் போட்டி மோசடிகளில் ஈடுபட்டுள்ளனரா? என்பது குறித்து விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

## அகில இலங்கை பாடசாலைகள் விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பம்

### செப். 11 தொடக்கம் ஒக். 3 வரை நடைபெறுகின்றன

கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளின் முதலாம் கட்டம் செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமாகி 13 ஆம் திகதி வரை கொழும்பு, குருணாகலை, நீர்கொழும்பு, அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் நடைபெற்றுள்ளது.



இரண்டாம் கட்டப் போட்டிகள் 18 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை கொழும்பு, குருணாகலை, மாத்தளை, பாணந்துறை, நீர்கொழும்பு ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

மூன்றாம் கட்டப்போட்டிகள் 29 ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 3 ஆம் திகதி வரை கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்குகளில் நடைபெறும். அதில் முழுமையாக மெய்வல்லுனர் போட்டிகளே நடைபெறும்.

ஒன்பது மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 905 பாடசாலைகளின் சார்பாக, 14,403 போட்டியாளர்கள் மேற்படி போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

போட்டிகளின் பரிசளிப்பு விழா ஒக்டோபர் 3 ஆம் திகதி மாலை 3 மணிக்கு நடைபெறும்

## மகளிர் மெய்வல்லுனர் போட்டிகள் ஒத்திவைப்பு

இம்மாதம் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த தேசிய மகளிர் மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி போட்டிகள் ஒக்டோபர் மாதம் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் தியகமவில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இப்போட்டிகளில் கலந்துகொள்ள விரும்புகின்றவர்கள் விண்ணப்பங்களை இம்மாதம் 24 ஆம் திகதி வரை ஒப்படைக்கலாம்.

கொழும்பு டொரிண்டனிலுள்ள மெய்வல்லுனர் விளையாட்டுச் சங்கத் தலைமையகத்தில் இந்த விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பைப் பேணுவோம்

அன்பு என்பது கடலை விட ஆழமானது. அன்பு மிக உடையோர் மேலோர் என்று பாரதியார் கூறியுள்ளார். சிபிச்சக்கரவர்த்தி உயிர்களிடத்தில் அன்பு கொண்டதாலேயே, புறாவுக்காக தன் உடலையே அர்ப்பணித்தார். இயேசு பிரானும் முஹம்மது நபியும் அன்னை தெரேசாவும் இத்தகையவர்களே. தீயன செய்வோருக்கும் அன்பு கொண்டு நன்மை செய்யும்படி திருக்குறள் கூறுகிறது.

"அன்புதான் இன்ப ஊற்று. அன்புதான் உலக மகாசக்தி" என்று கௌதம புத்தர் கூறியுள்ளார். சித்தார்த்தர் உயிர்களிடத்தில் அதிக அன்பு கொண்டவர். மனுநீதிச்சோழ மன்னன் தன்னுயிர் போல் மண்ணுயிர் பேணுபவன். பசுவின் கன்றை கொன்றதற்காக தன் மைந்தனையே தேர்ச்சக்கரத்தால் நெரிக்கப் பணித்தான். எனவே, நாம் அனைவரிடமும் அன்பு செலுத்த வேண்டும். அதுவே உலக மகா சக்தியாகும்.

ச.நஸீமா,
விபுலானந்தாக் கல்.,
திருகோணமலை.



# முருகனின் இலட்சியம்

மாலை மங்கி இரவாகிக் கொண்டிருந்தது. காலையில் வேலைக்குச் சென்ற முருகனின் தாய் இன்னும் வீடு திரும்பவில்லை. முருகன் அந்த சிறிய கிராமத்தில் இருக்கும் பாடசாலையில் பத்தாம் தரத்தில் திறமையாகப் படிக்கும் ஒரு மாணவன். அவனின் தந்தை அவன் சிறுவனாக இருந்தபோதே இறந்துவிட்டார். முருகனின் தாய் மிகவும் கஷ்டப்பட்டு கூலி வேலை செய்து எந்தக் குறையும் தெரியாமல் அவனை வளர்த்து வந்தாள்.

பாடசாலையில் நடைபெற இருக்கும் போட்டி நிகழ்ச்சிக்கு ஒரு தொகைப் பணம் கட்டும்படி அதிபரால் அறிவிக்கப்பட்டது. இந்த செய்தியைக் கேட்ட முருகன் மிகவும் கலங்கிப் போனான்.




போட்டியில் கலந்து கொள்ளத் தனக்குத் திறமை இருந்தும் அவ்வளவு தொகைப் பணத்திற்கு தன் தாய் எங்கே போவாள் என்று கவலைப்பட்டான். மாலையில் தன் தாயிடம் இதனைக் கூறியபோது, முருகனின் தாய் தன் மகனின் தேவையை எப்படியாவது நிறைவேற்றி வைப்பதாகக் கூறினார்.

அதனால்தானோ என்னவோ இன்று இரவாகியும் அம்மாவைக் காணவில்லை. அம்மா பணத்திற்கு என்ன கஷ்டப்படுகிறாரோ என்று கலங்கினான்.

பொறுமையை இழந்த முருகன் விளக்கு ஒன்றை எடுத்துக்கொண்டு தாயைத் தேடிப் புறப்பட்டான். முற்றத்திற்கு வரும்போது யாரோ மெதுவாக வருவதுபோல் தென்பட்டது. முருகன் உற்று நோக்கினான். முருகனின் தாய் கூனிக்குறுகி மிகவும் கஷ்டத்துடன் நடந்து வந்துகொண்டிருந்தார். உடனே ஓடிச் சென்று தன் தாயை இரு கைகளாலும் தாங்கிப் பிடித்துக்கொண்டு "இவ்வளவு நேரம் எங்கே அம்மா சென்றீர்கள்?" என்று வேதனையுடன் கேட்டான்.

"இன்று கொஞ்சம் நேரம் சென்றுவிட்டதப்பா" என்று கூறிய தாய் முருகனுடன் வீட்டுக்குள் சென்றார். உடனே அடுப்பை மூட்டி தன் தாய்க்கு ஒரு கோப்பை தேநீர் தயாரித்துக் கொடுத்தான் முருகன். "உனக்கு ஏனப்பா இந்த வேலை எல்லாம்! நீ போய் படி நான் முகம் கழுவிக்கொண்டு வந்து சாப்பிட ஏதாவது செய்து தருகிறேன்" என்று கூறி மெல்ல எழுந்தார் தாய்.
"வேண்டாம் அம்மா. நீங்கள் காலையில் செய்து தந்த சாப்பாட்டில் மீதி இருக்கிறது. அதை சாப்பிடலாம். நீங்கள் முகம் கழுவி விட்டு வாருங்கள்" என்றான் முருகன்.
விடியற்காலை, முருகன் எழுந்து வழமை போல் பாடசாலைக்குப் புறப்பட்டான்.
"அம்மா எங்கே?" என்று தாயைத் தேடினான். தாய் படுக்கையில் இருந்து எழுந்திருக்க முடியாதவாறு மிக வருத்தத்துடன் படுத்திருந்தார்.

முருகன் தாய் அருகில் சென்று, "அம்மா உங்கள் உடம்புக்கு என்ன?" என்று பாசத்துடன் விசாரித்தான்.

"எனக்கு ஒன்றுமில்லை மகனே. நேற்றுக் கொஞ்சம் வேலை அதிகம். அதனால், உடம்புக்கு கொஞ்சம் அசதியாக உள்ளது. அது கொஞ்ச நேரத்தில் சரியாகிவிடும். நீ பாடசாலைக்குப் போ" என்று கூறிய தாய் பையில் இருந்த ஒரு தொகை பணத்தை எடுத்து முருகன் கையில் கொடுத்தார். உனக்குத் தேவையான பணம் இதில் இருக்கிறது" என்றார். தனது தாய் தனக்காகப் படும் வேதனையை நினைக்கையில் முருகனின் கண்கள் கலங்கின. வேதனையுடன் பாடசாலைக்குப் புறப்பட்ட அவன்,நன்கு படித்து முன்னேறி தாயை சந்தோஷமாக வாழ வைப்பேன் என்று மனதில் உறுதி பூண்டு கொண்டான்.

எச்.எல்.எம்.ரில்வான்,
தரம் - $10^B$,
முஸ்லிம் மத்.கல்., குருதலாவ.



# வெற்றிக்கு மூலதனம் முயற்சியே!

வெளுக்கத் துடிக்கும் கிழக்கைப் போல நாம் உழைக்கத் துடிக்க வேண்டும். மறந்தும்கூட சோர்வுக்கும் தள்ளிப்போடும் எண்ணத்திற்கும். இடம் தரக்கூடாது. ஏனெனில், தள்ளிப்போடுவது பணிகளை மட்டுமல்ல; வெற்றிகளையும்தான்! வெற்றி என்பது பணிகளைத் தொடங்குவதில் மட்டும் இருக்கவில்லை. அந்தப் பணிகளை உரிய நேரத்தில் உயரிய முறையில் முடிப்பதில்தான் உள்ளது. ஆகவே, முறையான தொடக்கமும் முழுமையான நிறைவும் தான் சிறப்புமிக்க வெற்றியைப் பெற்றுத்தரும்.

கல்லுக்குள் மறைந்துள்ள சிற்பத்தை முதலில் தன் மனக்கண்முன் காண்கிறான் சிற்பி.பின் உளியால் அக்கல்லின் வேண்டாத பாகங்களை நீக்கிவிட்டு, அழகிய சிற்பத்தை அறிமுகம் செய்கிறான். அதுபோலவேதான் நாம் எவற்றால் முன்னேற முடியும்? எமது குறை நிறைகள் என்னென்ன என்பதையெல்லாம் முதலில் அறிந்து கொள்ள வேண்டும். பின்னர் தேவையற்றவற்றை அகற்றி எமது வெற்றிக்கான முயற்சியில் இறங்கவேண்டும்.

தொடர்முயற்சியும், நற்சிந்தனையுமே ஒரு சாதாரண மனிதனையும் சாதனையாளன் ஆக்குகின்றன. உழைக்கத் துணிந்துவிட்டால் உலகம் நமக்கு வாழ்த்துப் பாட ஆரம்பித்து விடும். ஆகவே, நமக்குக் கிடைக்கும் எந்த வாய்ப்பையும் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.

துணிவோடும் பங்கேற்றுக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நம் திறமை எதுவென அறிந்து அதில் முத்திரை பதித்திட முடியும். ஆகவே, உறக்கத்தையும் தயக்கத்தையும் உதறித் தள்ளி அச்சத்தை அகற்றி, தாழ்வு மனப்பான்மையைத் தகர்த்து தளராத முயற்சியுடன் வெளிவர வேண்டும். வெற்றிக்கு மூலதனம் இதுவே!

சி.கபிலினி,
தன்னாமுனை, மட்டக்களப்பு.



# காந்தி

காந்தி நல்ல காந்தி
கருணை தன்னை ஏந்தி
மாந்தருக்குள் சாந்தி
மலர வைத்த காந்தி!

சாதிப் பேயை ஓட்டி
சமரசத்தை ஊட்டி
நீதிப் போரை மூட்டி
நின்ற வழி காட்டி

அன்பு வழி நாடி
அன்னியரைச் சாடி
இன்ப வாழ்வு தேடி
ஈந்த நல்ல காந்தி

தீக்குணத்தை வென்று
தீண்டாமை
தனைக்கொன்று
அறப்போர் வழியே சென்று
புதுமை தந்த காந்தி.

எஃப்.சஹானா, திஹாரிய.

# எனது பாடசாலை

கல்முனைக் கல்வி வலயத்துக்குட்பட்ட, எழில் கொஞ்சும் மருதமுனைக் கிராமத்தின் மத்தியில், எனது பாடசாலையான கமு/அல்-ஹம்றா வித்தியாலயம் அமைந்துள்ளது. இங்கு தரம்-1 முதல் 11 வரை மாணவர்கள் கல்வி பயில்வதுடன், சுமார் 40 ஆசிரியர்களும் அர்ப்பணிப்புடன் கடமை புரிகின்றனர். பாடசாலையில் சிறந்த நிர்வாகம் செலுத்தும் அதிபர் பி.எம்.எம். பதுறுத்தீன் அவர்களது அயரா உழைப்பினால் இப்பாடசாலை முன்னேற்றமடைந்து வருகிறது.

பாடம், இணைப்பாடவிதானம், விளையாட்டு, கலைவிழா, புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள், க.பொ.த (சா/தர) பரீட்சைப் பெறுபேறுகள் என அனைத்திலும் வெற்றியைக் குவித்து வருகிறது எமது பாடசாலை.

ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அதிபருக்கும் இடையிலுள்ள சிறந்த புரிந்துணர்வு எனது பாடசாலையின் வளர்ச்சிக்கு சிறந்த அடிக்கல் எனலாம்.

சிரமதானம், சுற்றுலா, இல்ல விளையாட்டுப் போட்டி என அனைத்திலும் ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து பணியாற்றுவது சிறப்பம்சமாகும்.

என்.எப்.அய்மா,
கமு/அல்-ஹம்றா வித்.,
மருதமுனை.

# வளம் பெறுவீர்!




பிள்ளைகளே பிள்ளைகளே!
பிஞ்சு மனச் செல்வங்களே
கள்ளமில்லா மனத்தினரே
கடவுள் தந்த பாலகர்களே
காலையி லெழுந்து கடமைகளை
கருத்தாய் முடிக்கப் பழகிடுவீர்
வேளை தோறும் கற்றென்றும்
வித்தக ராக உயர்ந்திடுவீர்!

தாழ்வு நெஞ்சம் கொள்ளாதீர்
தரணியில் மலர்ந்த முல்லைகளே!
வாழ்வு மலர்ந்து வளம் பொங்க
வாகாய் நாளும் செயற்படுவீர்!
அஞ்சா நெஞ்சம் கொண்டிடுவீர்
அன்பு வழியில் சேர்ந்திடுவீர்!

கெஞ்சிப் பிச்சை யேற்காதீர்
கீழ்மைக் குணங்கள் தவிர்த்திடுவீர்!
நாளை உங்கள் கரங்களினால்
நாடு உயர்ந்து மிளிர்ந்திடனும்
காலம் போற்றிப் பயன் பெறுவீர்
கருத்தா யுழைத்து வளம்பெறுவீர்!

மு.துரைசாமி, சதர்லேண்ட், எல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவுக்கு விருந்து - 275 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்

**போட்டி: 01**
ஷிம்ரா உஸ்மான்,
423, நாங்கல்ல, துல்ஹிரிய.

**போட்டி: 02**
டி.வின்சியா,
C/291, அருனோதயா மாவ., ஒபேசேகரபுர, ராஜகிரிய.

**போட்டி: 03**
எம்.ரிகாஸ், 133/70, கொடமுதுன, நாவலப்பிட்டி.

**போட்டி: 04**
ருஹைம் பஹ்மி, 49/2A, கஹவத்த, அம்பதென்ன.

**போட்டி: 05**
அ.பபித்திரா, 331/1, யாழ் வீதி, மானிப்பாய்.

**பாராட்டுப் பெறுவோர்:**

- எஃப்.ஷியாமாஹ், சம்மாந்துறை-05.
- டீ.ஏ.அனிதா, கல்லாறு.
- என்.நாதில் அஹமட், புத்தளம்.
- நே.வித்யாசாகர், கிளிநொச்சி.
- மா.நாகதீபிகா, வட்டுக்கோட்டை.
- பாத்திமா ஹப்ரா, இறம்புக்கனை.
- ந.சிந்துபைரதி, கொடிகாமம்.
- எம்.மிஃப்ராஸ், கட்டுகஸ்தொட.
- வ.ரிதுபிரஷிக்கா, பெரியகல்லாறு-03.
- எஃப்.ருஷ்தா, அலவத்துகொட.

## அறிவுக்கு விருந்து 275 விடைகள்


**போட்டி: 04**
1. யாகம் - வேள்வி
2. வேதம் - மறை
3. குதிரை - புரவி

**போட்டி: 05**
1. 5, 21, 182, 374, 743
2. XIII, XLIV, XCVIII, DL, MII





தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்
1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.09.22 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.
அற்லஸ் அறிவுக்கு விருந்து 278
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


### இணைக்க — 3



### எத்தனை உள்ளன? — 1



### குழம்பியுள்ள சொற்களை ஒழுங்கமைக்க — 5

1. c/t/a/p/i/n/a - ..............................
2. g/c/m/i/a - ..............................
3. s/o/n/p/o - ..............................

### பொருத்தமற்ற சொல்லில் கோடிடுக — 4

1. அகம், கரம், மனை
2. ஞாயிறு, தினகரன், திங்கள்
3. கோது, புஷ்பம், மலர்
4. அடவி, குளவி, காடு

### வித்தியாசங்களில் X அடையாளமிடுக — 2





## விஜய் வாசகர் மடல்



வித்தியாசமான விடயங்களைத் தாங்கிவரும் 'விஜய்' பிரமாதம். 'நண்பனின் நற்குணம்', 'கரடியின் கதை' போன்றவை என்னை மிகவும் கவர்ந்தன.

**-எம்.ஹிராஸ்கான், எல்லை வீதி, ஓட்டமாவடி-03.**

'சங்கிலி மன்னனின் வரலாறு' எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அத்துடன், உன்னில் வரும் அத்தனை ஆக்கங்களும் என் கல்விக்குத் துணை நிற்கின்றன. உன்நிறை காணும் என்னால் உன் குறைகாணத் தெரியவில்லை.

**-க.விஜயலக்ஷ்மி, தரம் - 10B, சீ.சீ.த.ம.வித்., புவக்பிட்டி.**

'டெங்கு ஒழிப்பு பக்றீரியா' என்ற கட்டுரை மிகவும் பயனுள்ளதாக இருந்ததோடு, 'இரையை அரைத்து உண்ணும் முதலை இனம்' பற்றிய ஆக்கம் விசித்திரமானதாக அமைந்திருந்தது.

**-பா-நுஸ்ரா, வீச் ரோட், கல்முனைக்குடி-02.**

ஒவ்வொரு புதனும் பல புதிய விடயங்களைத் தருகின்றமைக்கு எனது மனம் கனிந்த நன்றிகள். 'கல்வி முகாமைத்துவம்', 'தொடர்கதை', 'விண்வெளித் தகவல்கள்', 'விளையாட்டுத் தகவல்கள்' உட்பட அனைத்து விடயங்களும் மிகவும் பயன்மிக்கவை.

**-பி.திருக்குமரன், இந்துக் கல்., யாழ்ப்பாணம்.**

நான் தரம் 6 இல் கல்வி கற்பதால், 'பண்டுகாபயன்' பற்றிய ஆக்கம் வரலாற்றுப் பாடத்திற்கு மிகவும் துணை புரிவதாக இருந்தது. அக்கட்டுரையை நன்கு வாசித்துப் பயன் பெற்றேன். இவ்வாறு மேலும் பல ஆக்கங்களைப் படைப்பதற்கு வாழ்த்துகிறேன்.

**-அப்துல்லா ஸம்மூன், தரம்-6A, அல்-கஸ்ஸாலி மத்.கல்., அடுளுகம.**

'டெங்கு ஒழிப்பு பக்றீரியா', 'பண்டுகாபயன் வாழ்க்கை', 'விண்வெளித் தகவல்கள்', கதைகள், போட்டிகள் என அனைத்தும் நான் உன்னில் விரும்பி வாசிப்பவை. நான் உனக்குப் பல ஆக்கங்களை அனுப்பியுள்ளபோதும், இதுவரை எதையும் பிரசுரிக்கவில்லை.

**-நவ்சிலா கலீல், தரம்-8D, பதுரியா ம.கல்., மாவனல்லை.**

***★ ஏராளமான ஆக்கங்கள் எமக்குக் கிடைத்தவண்ணம் உள்ளன. அவற்றைத் தரங்கண்டு படிப்படியாகப் பிரசுரித்து வருகின்றோம். தொடர்ந்து அனுப்புங்கள். 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்'. (ஆ-ர்)***

'அதிர்ஷ்ட மீன்', 'பண்டுகாபயன் வாழ்க்கை', 'டெங்கு ஒழிப்பு பக்றீரியா', 'காணாமல் போகும் தீவுகள்', 'அருகிவரும் வெள்ளைப்புலி இனம்' மற்றும் என் மனதைக் கவர்ந்த 'விண்வெளித் தகவல்கள்' போன்றவை மிகவும் சுவாரஸ்யமாகவும் பயனுள்ளதாகவும் அமைந்தன.

**-எஃப்.அஸ்மா, தரம்-9A, முஸ்லிம் ம.வித்., வெலிமடை.**

'கடல்நீர் குடிநீராகின்றது' என்ற தகவல் சிந்திக்க வைத்தது. சிறுவர்களைக் கவரும் 'BEN 10' சுவாரஸ்யமானது. இது எனக்குப் பிடித்த கார்ட்டூன் தொடராகும். 'பண்டுகாபயன் வாழ்க்கை' ஊடாக வரலாறு பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. 'கராட்டேயின் நோக்கம்' மிகத் தெளிவாக விளங்கியது. சர்வதேச கிரிக்கெட் சபையின் அறிமுக விருதான 'மக்கள் தெரிவு' விருதுக்கான பெயர்ப் பட்டியலில் மஹேல ஜயவர்த்தனவின் பெயர் உள்ளடக்கப்பட்டிருப்பதானது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.




**-பஸ்னா அன்வர்தீன், சந்திஸ் வீதி, வதகம.**

'பண்டுகாபயன் வாழ்வின் விசித்திர நிகழ்வுகள்', 'கடல்நீர் குடிநீராகின்றது', 'கராட்டே கலையின் நோக்கம்', 'செவ்வாயில் உயிரினங்கள்' போன்றவை அறிவுக்கு விருந்தாகின. 'டெங்கு நோயை ஒழிக்கும் பக்றீரியா (BTI)' பற்றிய தகவல்கள் காலத்தின் தேவைக் கேற்பதாகவும் உரிய அறிவுறுத்தலாகவும் அமைந்தன.

**-மு.தில்ஷாத், தரம்-8D, அல்-ஹிலால் வித்., சாய்ந்தமருது.**

**இந்த இதழில் (15.09.2010) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**
அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 22.09.2010.

**அனுப்ப வேண்டிய முகவரி:** வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**பெரும் எதிர்ப்புகளை முறியடித்து மன்னார் நகருக்குள் சங்கிலி மன்னனின் தமிழர் படை உட்புகுந்தது. பள்ளிமுனைக் கடற்பரப்பில் நங்கூரம் இட்டிருந்த பறங்கியரின் போர்க்கப்பலை தாக்கி அங்கிருந்தவர்களை சிறைப்பிடித்து சங்கிலி மன்னன் முன்னால் மண்டியிட வைத்தனர் கடல்வழி வீரர்கள்**

# மன்னார் நோக்கிய படையெடுப்பு






''நாடு விட்டு நாடு வந்து பாசிமணி, ஊசி விற்க வந்தவர்கள் எங்களுக்கா வீரம் காட்டுகிறார்கள். கொழும்புக் கோட்டையைக் கைப்பற்றினால் மன்னாரையும் கைப்பற்றி விடலாமென்ற எண்ணமா? அந்தப் பறங்கியருக்கு? தமிழ் மறவரின் வீரத்தை அறியாத மூடர்கள். வந்த பாதையைக் காட்டி அவர்களை ஓடவைக்க வேண்டும். அதிகாரியே நீங்கள் அஞ்சாது மாந்தை செல்லுங்கள். எம் படைகள் மாந்தை நோக்கி நகரும். அந்த வீணர்களை அழித்தொழிக்கும். இது உறுதி'' என்றான் சங்கிலி மன்னன். ஆவேசம் அவனை ஆட்கொண்டது, கோபம் கண்களைச் சிவக்க வைத்தது.

''ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக எம்முன்னோர் ஆண்ட மண்ணை அந்தப் பறங்கியர் கூட்டம் பிடிக்க விடலமா? தளபதியாரே! நானே இப்போரினை முன்னின்று நடத்துகிறேன். வேல்படை, வாள்ப்படை, காலாட்படைகள் அனைத்தையும் பண்ணைத்துறைக்கு அனுப்புங்கள். உயரிய போர்க்குதிரைகளையும் அங்கே கொண்டு வாருங்கள்'' என உத்தரவு பிறப்பித்தான் சங்கிலி மன்னன்.

மன்னன் சங்கிலி உத்தரவிட்ட மறுகணமே பண்ணைத்துறையில் படைகள் யாவும் ஒன்று சேர்ந்தன. படை வீரர்களையும் குதிரைகளையும் கொண்டு செல்லும் மரக்கலங்கள் யாவும் தயாராகின. மன்னன் தன் நம்பிக்கை மிகுந்த யுத்த வீரர்களை யாழ்ப்பாண அரசுக்குக் காவலாக நிறுத்திவிட்டு பண்ணைத் துறையை வந்தடைந்தான். மன்னன் சங்கிலியும் அவன் படைகளும் மரக்கலங்களிலேறி கரையூர், பாஷையூர், கொழும்புத்துறை கடல் வழிப் பாதையூடாக பூநகரியைச் சென்றடைந்தனர். மன்னன் சங்கிலியும் அவன் படைகளும் வரும்செய்தியை முன்கூட்டியே அறிந்திருந்த பூநகரி மக்கள் மன்னனையும் படைகளையும் வீர கோஷமிட்டு வரவேற்றனர்.

பூநகரி மக்களின் அளவில்லாத அன்பு உபசாரத்தை ஏற்று மகிழ்ந்த மன்னன் தன் படைகளுடன் தரைவழியே செல்ல மரக்கலங்கள் யாவும் கடல்வழியாக இரணைதீவை ஊடறுத்து விடத்தல் தீவுக் கரையோரமாக மன்னார் பகுதியை நோக்கிப் புறப்பட்டன. தரைவழியே சங்கிலி மன்னன் தலைமையில் செல்லும் படை வீரர்கள் காடுகள் கற்பாறைகள் கடந்து முழங்காவில், இலுப்பைக்கடவை வழியாக மாந்தையை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். மன்னன் சங்கிலி குதிரைப்படையோடு முன்னே செல்ல வேல்படை, காலாட்படை, வாள்ப்படை வீரர்கள் பின்னே அணிவகுத்துச் சென்றார்கள். வழியில் இடைமறித்த பறங்கியரின் தலைகளை வீழ்த்தியவாறும் ஏனையவர்களை சிறைப்பிடித்தவாறும் தமிழர்படை பொங்கிவரும் பேரலை போல் நகர்ந்தது. மாந்தை அதிகாரியின் மாளிகையைச் சங்கிலி மன்னனும் படைகளும் வந்தடைந்தபோது ஆதவன் தன்னொளி இழந்து மேற்கு வானில் மறைந்தான்.

அன்று இரவை அங்கு சங்கிலி மன்னன் கழித்தபோதும் பல திட்டங்களை வகுத்து விடியற் காலையில் போருக்கான ஆயத்தங்களைச் செய்தான். கடல்வழியாக வந்த மரக்கலங்களும் மாந்தைக்கரையை வந்தடைந்தன என்ற செய்தி மன்னனுக்கு எட்டியது. அவர்களையும் அதிகாலை ஆயத்தமாகும்படி உத்தரவிட்ட மன்னன் ஆசனத்தில் அமர்ந்தவாறே ஓய்வெடுத்தான். மறுநாள் காலை மன்னனும் அவன் படைகளும் மாந்தை அதிகாரியின் வழிகாட்டலில் மன்னாரை நோக்கித் தரைவழியாகவும் கடல்வழியாகவும் முன்னேறின. இடையில் எதிர்ப்பட்ட பறங்கியர்களின் தலைகள் வெட்டி வீழ்த்தப்பட்டன.

பெரும் எதிர்ப்புகளை முறியடித்து மன்னார் நகருக்குள் சங்கிலி மன்னனின் படைகள் உட்புகுந்தன. பள்ளிமுனைக் கடற்பரப்பில் நங்கூரம் இட்டிருந்த பறங்கியரின் போர்க்கப்பலைத் தாக்கி அங்கிருந்தவர்களை சிறைப்பிடித்து சங்கிலி மன்னன் முன்னால் மண்டியிட வைத்தனர் கடல்வழி வீரர்கள். மன்னார் கோட்டைக்குள் மறைந்திருந்த பறங்கியர் தலைவன் அல்போன்சாவையும் அவன் பாதுகாப்பு வீரர்களையும் சிறைப்பிடித்த தமிழர்படை சங்கிலி மன்னன் முன்னால் அவர்களைக் கொண்டு வந்து நிறுத்தியது.

பறங்கியர் தலைவன் அல்போன்சா சங்கிலி மன்னனைப் பணிந்து வணங்கினான். தங்களை மன்னித்து விடும்படி இரந்து வேண்டினான். ''உங்ளுக்கு மன்னிப்பா? தமிழர் தாயகத்தை சூறையாட வந்த உங்களை மரண தண்டனைக்கு உள்ளாக்க வேண்டும். இருந்தாலும் மன்னிக்கும்படி வேண்டிய உனக்கும் உன் வீரர்களுக்கும் தண்டனை அளிப்பது தமிழர் வழி வந்த எனக்கு அவமானம். அதனால் இன்றே இந்தப் புனித பூமியைவிட்டு வந்த வழியே வெளியேற வேண்டும்'' என்று கட்டனையிட்டான் சங்கிலி மன்னன்.

மன்னனின் கட்டளையை அதிகாரிகள் ஏற்று அல்போன்சாவையும் அவன் சார்ந்த பறங்கி வீரர்களையும் மன்னாரின் எல்லைப் புறத்தில் விட்டுவிட்டு வந்தார்கள். மன்னார் நகரமும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள அனைத்துக் கிராமங்களும் சங்கிலி மன்னனின் கட்டுப்பாட்டுக்குள் வந்தன. சங்கிலி மன்னன் சகல மன்னார்ப் பகுதி அதிகாரிகளையும் வரவழைத்து எல்லைப்புறங்கள் எங்கும் நன்கு பயிற்சி பெற்ற வீரர்களை நிறுத்துமாறு பணித்தான். பின்னர் பாலாவிக்கரைக்குச் சென்று அங்கு நீராடி எல்லாம் வல்ல கேதீஸ்வரப் பெருமானை வணங்கி தன் படைவீரர்களோடு மீண்டும் பூநகரி நோக்கிப் புறப்பட்டான். வெற்றி வீரனாக வந்த அவனை மக்கள் வெள்ளம் வழியெங்கும் கூடி வாழ்த்தினர். பூநகரி வந்தடைந்த மன்னன் அங்கு இரவைக் கழித்த பின் அங்கிருந்து புறப்பட்டு கொழும்புத்துறை வந்து அரியாலையூடாக நல்லூரை வந்தடைந்தான். நல்லூர் நகரம் விழாக் கோலம்பூண்டது. மக்கள் மன்னனையும் வீரர்களையும் மகிழ்வுடன் வாழ்த்தி வரவேற்றனர். (தொடரும்...)

**''மன்னிக்கும்படி வேண்டிய உனக்கும் உன் வீரர்களுக்கும் தண்டனை அளிப்பது தமிழர் வழி வந்த எனக்கு அவமானம். அதனால் இன்றே இந்தப் புனித பூமியைவிட்டு வந்த வழியே வெளியேற வேண்டும்'' என்று கட்டனையிட்டான் சங்கிலி மன்னன்**



# மிகப்பெரிய நூல் நிலையம்

அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் உள்ள காங்கிரஸ் நூல் நிலையமே உலகின் மிகப்பெரிய நூல் நிலையமாகும். அமெரிக்காவின் மிகப் பழைமையான நூல் நிலையமும் இதுவேயாகும். 1800 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நூலகத்தின் புத்தக செல்பின் நீளம் மட்டும் 860 கி.மீற்றர் இருக்கும். இங்கு கோடிக்கணக்கான புத்தகங்கள், இசைத்தட்டுக்கள், புகைப்படங்கள், வரைபடங்கள் என்பன உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்டர்நெட்டில் இடநெருக்கடி!








இணையத்தில் பாரிய இடநெருக்கடி ஏற்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அநேகமாக அடுத்த வருடம் செப்டெம்பர் மாதத்தை அடைகையில் இணையத்திலுள்ள இடவசதிகள் முற்றுமுழுதாகத் தீர்ந்துவிடும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வினைக் காணும்பொருட்டு, கடந்த மே மாதம் அயர்லாந்தில் நடைபெற்ற விசேட மாநாடொன்றில் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த 130 பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

'ஐரிஷ் ஐபீவி 6 டாஸ்க் ஃபோஸ்' (IRISH IPV6 TASK FORCE) என்றே இந்த மாநாட்டிற்கு பெயர் வைக்கப்பட்டிருந்தது. இங்கு முன்வைக்கப்பட்ட முக்கிய யோசனையொன்றின்படி, இப்பிரச்சினைக்குத் தீர்வு காண எத்தனிக்கப்பட்டது.

அதாவது, இணையத்தில் 1980 ஆம் ஆண்டில் அறிமுகப் படுத்தப்பட்டு தற்போது நடைமுறையில் உள்ள IPV4 எனப்படும் தொழில்நுட்ப முறையை IPV6 எனப்படும் புதிய தொழில்நுட்பத்திற்கு எவ்வாறு மாற்றுவது என்பது குறித்தே ஆராயப்பட்டது. இவ்வாறு மாற்றுவதன் மூலம் இணையத்தில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடிக்குத் தீர்வினைக் காண முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இணையத்தை தற்போது உள்ளதைப் போன்றே கொண்டு நடத்துவதற்கு பயன்படுத்தப்படுகின்ற பல்வேறு வகையிலான தொழில்நுட்பங்களில் 'ஐபி' எனப்படும் 'இன்டர்நெட் புரோட்டோகோள்' (IP-Internet Protocol) முதன்மையானதாகும். உலகிலுள்ள அனைத்துக் கணினிகளும் இணையத்துடன் தொடர்பை ஏற்படுத்திக்கொள்வது மேற்படி 'ஐபி' மூலமேயாகும்.







இணையத்தளங்களிலுள்ள தகவல்களை சேமித்து வைக்கின்ற 'ரூட் சேர்வர்ஸ்' (Root Servers) கணினிகளில் அந்தந்த இணையத்தளங்களில் 'ஐபி' சேமிப்பகம் காணப்படும்.

அதற்கமைய, கடந்த பெப்ரவரி மாதம் வரையில் நடைமுறையில் இருந்தது இந்த IPV4 என அடையாளப்படுத்தப்படுகின்ற இன்டர்நெட் புரோட்டோகோளின் 4 ஆவது வேர்ஷன் ஆகும். எனினும், இதில் காணப்பட்ட சேமிப்பு வலுத்தன்மையானது வரையறையைத் தாண்டியுள்ளமையால் அதற்கான மாற்றீடாகவே வேர்ஷன் 6 ஐக் கொண்ட 'IPV6' முறையை அறிமுகப்படுத்துவது குறித்து முன்குறிப்பிட்ட மாநாட்டில் ஆலோசிக்கப்பட்டுள்ளது.



## அடுத்த வருடம் செப்டெம்பர் மாதமளவில் இன்டர்நெட்டில் இடவசதி தீர்ந்துவிடும்

அவ்வாறு மாற்றப்பட்டால் பல கோடிக்கணக்கிலான தகவல்களை சேமிக்கக்கூடிய வலுவை IPV6 கொண்டிருக்கும்.ஆனால், இணையத்தின் முக்கிய அம்சங்களாக உள்ள கூகுல், ஃபேஸ்புக் போன்ற நிறுவனங்கள் IPV4 யிலிருந்து IPV6 க்கு மாற வேண்டியதும் அவசியமாகும். அவ்வாறே, இணைய வசதிகளை வழங்குகின்றவர்களும் (ISP) இந்த புதிய முறைக்கு மாறல் வேண்டும். தற்போது இது மந்தகெதியிலேயே நடைபெறுவதால் இதனை விரைவுபடுத்துவது எவ்வாறு என்பது குறித்தும் ஆராயப்பட்டு வருகின்றது.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010, செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday September 15, 2010.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org